R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
# புதினம்
PUTHINAM
OCTOBER 2019
மலர் 24
இதழ் 9

L&L LAW SOLICITORS

1. Immigration and Asylum
2. Human Rights Act challenges and European Law
3. Family Law
4. Criminal Law
5. Landlord and Tenants
6. Civil Litigation
7. Public Law
46 High street
London SW19 2BY.
Tel: 020 8544 9285
Fax: 020 8542 9530
Email:llsolicitors@hotmail.com
Although this is a new firm of solicitors, it is run by experienced legal practitioners of over 25 years standing.

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
WESTERN Jewellers
Tooting Branch:
230 Upper Tooting Road,
London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909


THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# மாயவலை

**'தீர்விற்கு உத்தரவாதமளிக்கும் வேட்பாளருக்கே நாம் ஆதரவளிப்போம்'....**

இது சனாதிபதி வேட்பாளர் குறித்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் இன்றைய நிலைப்பாடு.

2015 தேர்தலிலும் இப்படித்தான் ஏதோ சொன்னதாக நினைவிற்கு வருகிறது.

தபால் மூல வாக்களிப்பு முடிந்த பின்னரே கூட்டமைப்பின் தெரிவும் வெளியிடப்பட்டது.

முதலிலே சொன்னால், பெரும்பான்மையான சிங்கள மக்களின் வாக்குகள் மகிந்தாவிற்குச் சென்று, அவர் வெற்றி பெறலாம் என்பதால் சொல்லவில்லையாம்.

2010 இல் மகிந்தாவை வீழ்த்த சரத் பொன்சேக்காவிற்கும், மீண்டும் மகிந்தரை வீழ்த்த மைத்திரிக்கு வாக்களிக்கச் சொன்ன கூட்டமைப்பு, இந்த முறை கோத்தாவை வீழ்த்த சஜித்திற்கு வாக்களிக்க சொல்லுமா?.

இந்தத் தடவையும் தபால் மூல வாக்களிப்பு முடிந்தபின்னர் கூட்டமைப்பின் முடிவு வெளிவருமா?.

இது ஒருபுறமிருக்க, வரும் சனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன?.

தேர்தலில் வாக்களிக்க வேண்டுமா?. அப்படி வாக்களிக்க வேண்டுமாயின், யாருக்கு வாக்களிக்க வேண்டும்?. அல்லது கஜன் பொன்னம்பலம் சொல்வது போல் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுமா?. அல்லது பொதுவான தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டுமா?..என்பது போன்ற பல கேள்விகள் எழுகின்றன.

களத்தில் நிற்கும் கோத்தா யார் என்பதை தமிழ் மக்கள் நன்கறிவர். முள்ளிவாய்க்காலோடு சேர்ந்து கோத்தபாயாவின் நினைவு வருவதை தடுக்க முடியவில்லை.

ஆனால் சஜித் என்பவர் புரியாத புதிராக இருக்கிறார். நீராவியடி கோவில் விவகாரம் குறித்து கோத்தபாய வாய் திறந்தாலும், சஜித் பிரேமதாச மௌனமாக இருக்கிறார்.

'ஒற்றையாட்சிக்குள் அதியுச்ச அதிகார பகிர்வு' என்கிறார் சஜித் .

அந்த உச்ச நிலை என்னவென்று கூட்டமைப்பினர்தான் அவரிடம் கேட்டுச் சொல்ல வேண்டும்.

சிங்களத்தின் அதிகார போட்டியில், தீர்வு என்கிற மாயவலை வீசப்படுகிறது.

கடந்த நல்லிணக்க ஆட்சியில் (?), 'சிறிசேன' இதயக்கனியால் எட்டப்படாத தீர்வினையா, 'பிரேம' இதயக்கனி தந்துவிடப்போகிறார்...?.

'உணர்ச்சி அரசியலை விட்டு யதார்த்த அரசியலுக்கு வாங்க'...என்கிற அடிமைக்குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.


அவதானம் மக்களே..! •

**இதய பூர்வமான தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

YOUR TUITION SOLUTION
GCSE Biology & Chemistry New (9-1)
Expert tutoring
Small Groups
Starting September 2019
07508516737
Mrs. Siva PhD
(CROYDON)

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
18வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
அனைத்தும்
அதிரடி மலிவு விலையில்
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

டயபட்டிஸ் சலன்ஜ்
ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு
100% கட்டுப்படுத்தலாம்
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
மருத்துவ ஆலோசனைக்கு: 0208144 1553
Viber: 0044 7833341693 skype: homoeocare
வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com


தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448




ப.வை. ஜெயபாலன்

# ஈழத்துப் பழமையின் சுவாசம் இன்றும் வாழும் ஒரு ஊர்

இலங்கையின் வடமாகாணத்துக்கு எழில் தரும் சப்த தீவுகளில் ஒன்று. ஊர்காவற்றுறை தொகுதிக்கு உட்பட்டது. குறிகட்டுவான் துறையில் இருந்து படகுப் பயணம் மூலம் யாழ்குடாவுடன் குலவி மகிழும் ஒரு அரிய தீவு. 50 சதுரகிலோ மீற்றர் இதன் பரப்பளவு. எட்டு கிலோ மீற்றர் நீளம், ஆறு கிலோ மீற்றர் வரை அகலம். டச்சுக்காரர் இலங்கையை ஆண்டபோது நெடுந்தீவில் கோட்டை அமைத்திருந்தனர். டச்சுக்கோட்டை, மேமன் கோட்டை என இதன் சிதிலங்கள் இன்றும் இங்கு அழிபாடுகளும் அடையாளமுமாக நிற்கின்றன.



சமீபத்தில் சென்று நின்று பார்க்க இம்முறை சந்தர்ப்பம் எட்டியது. தனித்துவ சிறப்புக்கள் கொண்ட தீவு. உள்ளம் நிறைந்த பூரிப்போடு உபசரிக்கும் உறவுகள். கன்னத்துடன் கன்னம் ஒட்டி அணைத்து வரவேற்கும் அன்பு அடையாளம். வெட்டவெளி கடலோரம் கொட்டிக்கிடக்கும் மீன்வளம். கட்டாந்தரை எங்கும் நிரவிக்கிடக்கும் பனை வளம். கல்வி கற்க ஏழு பள்ளிகள். பெரியதும் சிறியதுமாக பரவிக்கிடக்கும் ஆலயங்கள். சவர் மண்ணுள்ளும் தரம் கண்டு வெங்காயம், மிளகாய், காய்கறி என்று பயிர் செய்து பயன் கொள்ளும் கடும் உழைப்பு. ஊர்வெளி தோறும் மேய்ந்து திரியும் மாடுகள், ஆடுகள், டச்சுக்கால குதிரைகள். அவை தண்ணீர் பருக என்றே அமைக்கப்பட்ட தண்ணீர் தொட்டிகள். அந்த தொட்டிகளையும் ஒவ்வொரு இல்லங்களின் தண்ணீர் தாங்கிகளையும் நிறைக்க பிரதேச சபை மூலமான நீர் விநியோகம். இல்லாமைகளையும் வல்லன்மையுடன் கையாளும் கடும் உழைப்பு. இத்தனையையும் காண ஒரு வியப்பு.

1,500 குடும்பங்கள், 4,500 வரையான வாக்காளர்கள் தற்போது உள்ளதாக பிரிவு செயலக, அரசாங்க பதிவேட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. இங்கு பதிவில் உள்ள பிரதேசவாசிகளில் 1000 வரையானவர்கள் அரச உத்தியோகத்தர்கள். இவர்களில் யாழ்குடா நாட்டில் இருந்து அன்றாடம் வரும் உத்தியோகத்தர்களை அழைத்து வர குறிகட்டுவானில் இருந்து காலை 7.30க்கு படகுச் சேவை. இதேபோல் இங்குள்ள யாழ்குடா நாட்டு உத்தியோகத்தர்களுக்காக இங்கிருந்து இதே நேரம் படகுச் சேவை. இச்சேவைகள் இலவசம்.

வெப்பம் கோடையில் உச்சமாக கக்கும். வீதி எங்கும் புளுதி பறக்கும். பேருந்து சேவைகளும் இடை இடை தொடரும். சுற்றுலா பயணிகளுக்கு வாடகை கனரக வண்டி வசதிகள் உண்டு. தங்கு விடுதி; குளிரூட்டி உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டதாக துறைமுகம் அருகே நின்று சுற்றுலா பயணிகளை வரவேற்கிறது.

எல்லைகளை பிரிக்க கட்டடங்களைச் சுற்றிலும் உள்ளன.

ஆங்காங்கே திட்டுத்திட்டாக கொட்டிக் குவிந்துள்ள கற்கள் இவை. இவற்றை அடுக்கி தொடுத்துள்ள கல்வேலிகள் நெடுந்தீவுக்கே உரிய தனி அழகு. வளவுகள் தோறும் முருங்கை முதலான பயன்தரு மரங்கள்.

போர் அனர்த்தங்களால் ஊறுபட்ட ஊர் அல்ல இது. ஆனாலும் புலம் பெயர்ந்து வெளிநாடு போக கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தியோரும் யாழ் நகர்புறம் நகர்ந்து கொண்டோரும் கைவிட்ட வீடுகள் பாழடைந்து பரவலாக கிடப்பதை பார்க்க முடிகிறது. ஆயினும் ஏனைய ஊர்களின் நடைமுறைபோல் இல்லாது உத்தியோகத்தர், ஓய்வூதியர்கள் கூட போரின் பின்பான வீட்டமைப்பு திட்ட அரச நிதி உதவியை பெறும் வாய்ப்பை பெற்றுள்ளனர். வீடு இல்லாத வெறும் காணிகளில் கூட சமுத்தி திட்டம் மூலம் கட்டப்பட்ட மலசல கூடம் பூர்த்தியாகி நிற்கிறது. உத்தியோக வாய்ப்பு முதலாக இத்தகைய தனித்துவ வாய்ப்புகளை நெடுந்தீவு பெறக் காரணம் தமது பாராளுமன்ற உறுப்பினர்தான் என்பது ஊரார் பலரின் நன்றிக்குரிய கருத்து.

வெடி அரசன் கோட்டை, மேமன் கோட்டை என்பன முன்னைய ஆட்சியாளர்களின் கோட்டை கொத்தளங்களின் சாட்சியாக கூரைகள் அற்ற, அழியாத கற்சுவர்களை கொண்ட சாட்சியங்களாக உள்ளன.



பெருக மரம் என்று ஒன்று. அரச ஆதரவோடு அருங்காட்சி மரமாக பாதுகாக்கப்படுகிறது. அடிபெருத்த மரம். உள்ளே ஆறு பேர் வரை நிற்கக் கூடியதாக மரத்தின் அடிப்புறத்தோடு ஒட்டி வாயில். சின்ன இலை. அழகான பூ. இயற்கை இம்மண்ணுக்கு ஈந்த அதிசயக் கொடை.

வெல்லை கடல்ஓரம். அழகான கடற்கரை. கரையில் இருந்து உள்ளே பெரும் தூரம் மணல். உல்லாசமாக கடல்நீராட ஏற்ற ஒரு கடல் ஓரம். நிழல் குடைகளும், நிரந்தர ஆசனங்களும் களைப்பாற கை கொடுக்கின்றன. நாற்புறமும் பரந்து விரிந்த கடல்; மீன் வளத்தையும் தருகின்றது. தமக்காக தாமே மீன் பிடிப்போரும் இங்கு மிகுதி.


பனைவளம் இம்மண் பெற்ற இன்னொரு கொடை. வீடுகள் தோறும் பனாட்டு பாயில் காயும். பெட்டி, கடகம் என்று ஓலையில் இழைப்பதும் இங்கு குடிசைக் கைத்தொழில். இம்மண்ணின் பனைகள் சுரக்கும் கள்ளு தனி ருசி. வெயில் வெட்கைக்கு ஒரு அமிர்த பானம். இங்கு கள் சேர்ப்போர் குறிப்பிட்ட ஒரு சாதி சமூகத்தவர்கள் அல்ல. வருவாய் நோக்கில் அனைவர்க்கும் இது தொழில். தெங்கு பனம் பொருள் உற்பத்தி சங்க அமைப்பும், கள்ளு; தவறணைகளில் மட்டும் விற்கப்படலாம் என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால். நெடுந்தீவில் என்றுமே இச்சட்டம் நடைமுறையில் இல்லை என்று காலா காலமாக வாழும் உறவுகள் கூறக் கேட்க ஆச்சரியமாக இருந்தது. கள்ளைப்பற்றி கதைத்த 5 நிமிடங்களில் அடுத்த தெருவில் இருந்து நுரை கக்கும் கள்ளு நிறைந்த போத்தல் கைக்கு வந்தது. டச்சுக்காரர் ஆண்ட காலம். தாகத்துக்கு ஆளுனர் நீர் கேட்டாராம். நீரைவிட இது நல்லது என கள்ளை ஊர்க்காரர்கள் கொடுத்தனராம். சுவையில் மயங்கிய வெள்ளையர் என்ன பானம் இது? என கேட்டாராம். பனையைக் காட்டிய ஊர்காரர் இதற்கும் மரவரி கேட்கிறீர்களே என குறைப்பட்டாராம். அன்று ரத்தான வரி இன்றுவரை நெடுந்தீவில் இல்லை என்பது இங்கு கூறப்படும் செவி வழி கதை.

டச்சுக்காரர் உயர்ரக குதிரைகளை தம் ஆட்சிக்காலத்தில் நெடுந்தீவில் இறக்கி உள்ளார்கள். அவை இன்றும் வெளிகள் எங்கும் சுதந்திரமாக நடமாடுகின்றன. அவற்றுக்கான மேச்சல் நிலம் அருகே அவற்றின் தாகத்தை தீர்க்க தண்ணீர் தொட்டிகள் ஆங்காங்கே கட்டப்பட்டுள்ளன. இத்தொட்டிகளில் நீர் நிரப்பும் பணியையும் நிறைவேற்றுகின்றது. டச்சுக்கால குதிரை கட்டும் மையம் ஒன்று கற்தூண்களையும், இரை தொட்டில்களையும் கொண்டதாக இன்றும் காணப்படுகின்றது.

எங்கும் போலவே இங்கும் இரு பெரிய ஆலயங்கள் எழிலாக கோபுரம் சகிதம் எழும்பி நிற்கின்றன. வெளிநாட்டில் வாழும் இவ்வூராரின் குல தெய்வ நம்பிக்கை நித்திய பூசைகள் பக்தர்கள் சிலரே என்ற போதும் தவறாது நடைபெறுகின்றன.

அண்மைக்காலம் வரை மின்சார விநியோகம் கட்டணம் இன்றித்தான் குடியிருப்பவர்களுக்குப் பயன்பட்டது என்பதை அறிந்தபோதும் ஆச்சரியம் எழுந்தது. “இணக்க அரசியலால்” பொதுமக்களுக்கு இத்தனை நன்மைகளா என்றே எண்ணத் தோன்றியது.

பழமையின் சுவாசம் சீராக இன்னும் ஓடும் ஒரு ஊர். “வாழத் தொடர்ந்து முயன்றதனால் வையத்தில் உயர்ந்தது யாழ்ப்பாணம்” என்ற பெருமைக்கு அர்த்தம் தரும் ஊர். ஒவ்வொரு தமிழனும் சுற்றிப்பார்த்து பெருமையடையக் கூடிய சுற்றுலா மையமும் கூட. ●



கட்சியின் தலைமையை ரணில் வைத்திருக்கும் சூத்திரம்

# சஜித் வெற்றி பெற்றால் பிரதமர் பதவி தோல்வியுற்றால் எதிர்க்கட்சித் தலைவர்

முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவிலை மையப்படுத்தி சிங்கள பௌத்த இனவாத வெறியாட்டம் வேகம் கொண்டுள்ளது.

மகரகமவில் நடைபெறவேண்டிய பௌத்த பிக்குவின் இறுதிச் சடங்கை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளவுக்கு எடுத்துச் சென்று, நீதிமன்ற உத்தரவையும் மீறி அடாத்தாக தகனம் செய்து மகிழ்ச்சிக் கொண்டாட்டம் நடத்தியுள்ளனர் பௌத்த பிக்குகள்.

இந்த அடாவடித்தனத்துக்கு தலைமை தாங்கியவர் நன்கறியப்பட்டவரான ஞானசார தேரர். காவியுடை என்பது சட்டத்துக்கு அப்பாற்பட்டதென்றும், பௌத்த நாடான இலங்கையில் சட்டம் அதற்கு உட்பட்டதென்றும் சவால் விட்டு வருபவர் இவர்.

ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றில் பல வருட சிறைவாசம் பெற்று உள்ளே இருந்த ஞானசாரருக்கு மன்னிப்புக் கொடுத்து வெளியே கொண்டு வந்தவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஷஅகப்பை பிடிப்பவர் நம்ம ஆள்| என்ற பழமொழியை ஞாபகமூட்டும் வகையில் மைத்திரியின் தோழன்பு அவரை தாம் நினைப்பவற்றைச் செய்பவராக மாற்றியுள்ளது.

முல்லைத்தீவைச் சிங்களமயமாக்குவதற்காக அங்கு குடியேற முயற்சிக்கும் ஞானசார தேரருக்கு ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரிலுள்ள சிங்கள பௌத்த மதவாதிகள் குழுவொன்று தேவையான வளங்களைக் கொடுத்து வருவதாக தெரியவந்துள்ளது.

போர்க்குற்றவாளிகளில் ஒருவரான சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாகியிருப்பதும், இன்னொரு போரக்குற்றவாளியான கோதபாய ராஜபக்ச அடுத்த ஜனாதிபதியாக வரத்துடிப்பதும் ஞானசார தேரருக்கும் அவரது காவியுடைக் கூட்டாளிகளுக்கும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இலங்கையில் சிங்களவர் தமிழருக்கிடையேயானது இனப்பிரச்சனை, அரசியல் பிரச்சனை என்ற கட்டம் மாறி மதப்பிரச்சனையாக மாற்றப்பட்டு வரும் இவ்வேளையில் அரசாங்கம் கண்மூடிக் கொண்டு மௌன அங்கீகாரம் வழங்கி வருகிறது.

இதற்கு உறுதுணையாக கொழும்பின் சிங்கள ஆங்கில ஊடகங்கள் நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தை இருட்டடிப்புச் செய்து வருகின்றன. கொழும்பிலுள்ள ராஜதந்திர வட்டாரங்களுக்கு இது தெரிந்துவிடக்கூடாதென்பதில் இந்த ஊடகங்கள் காட்டிவரும் அக்கறைகூட ஒருவகையில் இனவாத வடிவமே.

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒன்றரை மாதங்களே இருக்கின்ற இவ்வேளையில் தமிழர் தாயகத்தில் பௌத்த ஆதிக்கம் தலைவிரித்தாட, தெற்கில் சிங்களக் கட்சிகள் தங்களின் ஜனாதிபதி வேட்பாளர்களை நிர்ணயம் செய்வதில் அக்கறை கொண்டுள்ளன.

ஆகஸ்ட் 11ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் என்ற பெயரில் ராஜபக்ச குடும்ப பிரதிநிதியாக கோதபாய ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டார்.

இக்கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ச. கோதபாய வெற்றி பெறுவாரானால் மகிந்தவே அடுத்த ஆட்சியில் பிரதமர். மகன் நாமல் ராஜபக்சவுக்கும் இளைய சகோதரர் பசில் ராஜபக்சவுக்கும் அமைச்சர் பதவிகள். அங்குமிங்குமாக ஒட்டியிருக்கும் உறவினர்களுக்கும் பல பதவிகள் உண்டு.

அப்படியானால், ராஜபக்ச குடும்ப ஆட்சி மீண்டும் தலைதூக்க கோதபாயவின் வெற்றி வழிவகுக்கும்.

ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஜே.வி.பி.யினர் கொழும்பு காலிமுகத்திடலில் மாபெரும் பேரணியொன்றை நடத்தி அனுர குமார திசநாயக்கவை வேட்பாளராக அறிவித்தனர். 20 வருடங்களுக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.வி. இறங்கியுள்ளது.

இடதுசாரிக் கட்சியினரதும், இளம் வாக்காளர்களினதும் ஆதரவு கிடைக்குமானால் சுமார் எட்டு முதல் பத்து லட்சம் வரையான வாக்குகளை ஜே.வி.பி. பெறக்கூடும். இது கோதபாயவின் வாக்கு வங்கியை குறைச் செய்யும்.

**ஜனாதிபதி வேட்பாளராவதைவிட கட்சியின் தலைவர் பதவியை தம்மிடம் வைத்திருப்பதில் ரணில் ஏன் அக்கறை காட்டுகிறார்? அப்பதவி தம்மிடம் இருந்தாலே பிரதமர் அல்லது எதிர்கட்சித் தலைவராகலாம் என்பது அவருக்குத் தெரியும். சஜித் வென்றாலென்ன தோற்றாலென்ன தமக்குரிய இடம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் கட்சித் தலைமை தம்மிடம் இருக்க வேண்டுமென்பதை அறிந்தே ரணில் காய்களை நகர்த்துகிறார்.**

கடந்த பல மாதங்களாக இழுபறியிலிருந்த ஐக்கிய தேசிய கட்சியை தலைமையாகக் கொண்ட முன்னணியின் வேட்பாவளர் தெரிவு ஒரு முடிவுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எந்த வகையிலும் நம்ப முடியாததாக சஜித் பிரேமதாசவை வேட்பாளராக கட்சித் தலைவரான



ரணில் விக்கிரமசிங்கவே முன்மொழிந்து பிரச்சனையை சுமுகமாகத் தீர்த்துள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்க குத்துக்கரணம் அடித்தாரா அல்லது ஷயு ரேண்| போட்டாரா என்பது எவருக்குமே சரியாகப் புலப்படவில்லை.

இலங்கை அரசியலில் கிழட்டு நரி என்ற பட்டத்தில் பிரபல்யமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பெறாமகனான ரணில் விக்கிரமசிங்கவை குள்ளநரி என்றே பலரும் குறிப்பிடுவர். அப்பெயருக்கேற்ப மற்றவர்களுக்குப் புலப்படாத திட்டமொன்றின் பின்னணியில் சஜித் வேட்பாளராக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நம்பமுடியாத ஆனால் நம்பியே ஆகவேண்டிய ஒரு விடயம் இதுவாகும். அதனை சுருக்கமாக தெரிந்து கொள்வது காலத்தின் கட்டாயம்.

அரசியலில் எதிரும் புதிருமாகக் காட்சி தரும் ரணிலும் மகிந்தவும் உள்ளார்ந்த நட்புக் கொண்ட அரசியல்வாதிகள். இருவேறு கட்சிகளின் தலைவர்களான போதிலும் இருவருக்கும் பாதிப்பு ஏற்படாமல் ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொள்வது இவர்களிடையே எழுதாத ஒப்பந்தம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த தோல்வியடைந்த அன்றிரவு அரசுக்குச் சொந்தமான உலங்கு வானூர்திகளை வழங்கி மிகவும் பௌத்திரமாக மகிந்தவையும் அவரின் குடும்பத்தினரையும் அம்பாந்தோட்டைக்கு அனுப்பி வைத்தவர் ரணில்.

நல்லாட்சிக் காலத்தில் பல வழக்குகளில் மகிந்த - அவரது மனைவி - அவரது மகன்மார் - மற்றும் கோதபாய ஆகியோர் மீது எந்த வழக்குகளும் பாயாது சகல பாதுகாப்புகளையும் அளித்தவரும் ரணில்தான்.

இந்தப் பின்னணியில், மகிந்த குடும்பம் ஆட்சிக்கு வருவதையோ, கோதபாய ஜனாதிபதியாக வருவதையோ ரணில் தமக்கு ஆபத்தானதாகப் பார்க்கவில்லை. ஒருவகையில் தமக்குப் பாதுகாப்பானதாகவே இதனை அவர் கருதுகிறார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஆரம்பக் கருத்துக் கணிப்பீடுகள் கோதபாயவுக்கே சாதகமாகவுள்ளன. ஊடகங்களும் சாத்திரங்களும் தினசரி இதனையே தெரிவித்து வருகின்றன.

இப்படியான சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் தோற்றவர் என்ற களங்கத்தை தமக்கு ஏற்படுத்திக் கொள்ள ரணில் இப்போது விரும்பவில்லை.

எனவே, சஜித் போட்டியிடுவதாக அறிவித்து, கோதபாயவிடம் அவர் தோல்வியடைந்தால் அத்துடன் அவரது அரசியல் வாழ்க்கை அஞ்ஞானவாசம் அடைந்துவிடுமென்பது ரணில் போட்டிருக்கும் கணக்கு.

சஜித் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடுவது எந்தவகையிலும் தாம் தொடர்ந்து வகித்துவரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் பதவியில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்பதை முற்கூட்டியே அவர் நிச்சயப்படுத்திவிட்டார்.

இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் எவரும் ஏதாவதொரு கட்சியின் தலைமைப் பதவியிலிருந்தால் மாத்திரமே பிரதமர் அல்லது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்க முடியும். இதனை நன்குணர்ந்ததாலேயே மகிந்த ராஜபக்ச பொதுஜன பெரமுன என்ற புதிய கட்சியை உருவாக்கி, அதன் தலைவராகி, அதன் வேட்பாளராக கோதபாயவை நிறுத்தியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் கோதபாய ஜனாதிபதியாகத் தெரிவானால், அக்கட்சியின் தலைவர் என்ற பதவி வழியாக பிரதமர் பதவி மைத்திரிக்குச் சென்றுவிடும்.

இதன் காரணமாகவே பொதுச்சின்னத்தில் கோதபாயவை போட்டியிட இணங்காது, பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் அவர் போட்டியிடுவார் என்ற நிலைப்பாட்டில் மகிந்தவும் அவரது குழுவினரும் உள்ளனர்.

மகிந்தவின் திட்டத்துக்கு நிகரான திட்டத்தையே ரணிலும் வகுத்துள்ளார். இதனை பின்வருமாறு பார்க்கலாம்.

42 வருட அரசியலில் நான்கு தடவை பிரதமராக இருந்தவர். பல தடவை எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர். பல அமைச்சர் பதவிகளை வகித்தவர். முதலாவது ஜனாதிபதி ஜே.ஆரின் குடும்ப வாரிசு. எனவே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக தாமே தொடர வேண்டுமென்பது அவரது இலக்கு. கட்சியின் தலைவராக இருந்தால் மட்டுமே வெற்றி பெற்றாலென்ன தோல்வியடைந்தாலென்ன அரசியல் உயர்பீடக் கதிரையில் அமரும் வாய்ப்பு எப்போதும் இருக்கும்.

சஜித் வெற்றி பெற்று ஜனாதிபதியானால், கட்சியின் தலைவர் என்ற பதவி வழியாக ரணில் பிரதமராவார். இதனை எவராலும் தடுக்க முடியாது. 19வது திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதியைவிட பிரதமருக்கே கூடிய அதிகாரங்கள்.

சஜித் தேர்தலில் தோல்வியடைவாரானால் கட்சித் தலைவர் என்ற வகையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி ரணிலுக்கே செல்லும். சஜித்துக்கு எந்தப் பதவியும் கிடையாது. அவரின் எதிர்காலம் பூச்சியமாகும்.

முடிவில், கோதபாய வென்றால் மகிந்த பிரதமர். ரணில் எதிர்க்கட்சித் தலைவர். சஜித் வெற்றி பெற்றால் ரணில் பிரதமர், மகிந்த எதிர்க்கட்சித் தலைவர்.

இருவரில் யார் வென்றாலென்ன தோற்றாலென்ன, ரணிலுக்கும் மகிந்தவுக்கும் உயர் பதவிகளுக்கு உத்தரவாதம். இந்தச் சூத்திரம் தேர்தல் முடிவுகளின் பின்னரே பலருக்கும் தெரிய வரலாம்.

இவ்வகையான திட்டங்களை நெறிப்படுத்துவதில் ரணிலும் மகிந்தவும் கூடப்பிறவாத இரட்டையர்கள்.

இத்தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்


ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk



## DANCE COMPETITION

இளம் கலைஞர்கள் தங்கள் திறமைகளை உலகெங்கும் வெளிப்படுத்த சாஸ்வதம் ஓர் செவ்வியல் நடனப் போட்டியை நடத்தவுள்ளது. சாஸ்வதம், 8-16 வயதுடைய இளம் திறமையாளர்களுக்கு திறமையை வெளிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

30 November 2019 - 5 மணியளவில், Harrow, st Andrew Church அரங்கில் தெரிவு செய்யப்பட்ட 11 குழுக்கள் கொண்ட போட்டியாளர், 5 நீதிபதிகள் முன்னிலையில் திறமைகளை வெளிப்படுதஉள்ளனர்.

விரைந்து உங்கள் நுழைவு சீட்டுகளை பெறுமாறு கேட்டு கொள்கிறோம்.

சாஸ்வதம்
07443 735906/ 07506 946038
info@sasvatham.com



## விமலின் பக்கங்கள்




**நூல் வெளியீட்டு விழா - அழைப்பிதழ்**

தமிழ்கூறு நல்லுலகத்திற்கு நன்கு அறிமுகமான மூத்த தமிழ் ஒலிபரப்பாளர் இலண்டன் வழக்கறிஞர் **விமல் சொக்கநாதன்** எழுதிய **விமலின் பக்கங்கள்** நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு உங்களைப் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இடம் : **Lewisham Sivan Centre**, Theatre Style Hall,
4A Clarendon Rise Lewisham, London SE13 5ES
நாள் : 26.10.2019 | சனிக்கிழமை மாலை 6 மணி

விழாத் தலைமை : **ஸ்ரீமதி ஆனந்தி சூரியப்பிரகாசன்**
(London BBC தமிழோசை - முன்னாள் தயாரிப்பாளர்)
சிறப்புரைகள் :
**ஸ்ரீமதி சுமதி சுரேஷன்**
(IBC TV ஒளிபரப்பாளர்)
மருத்துவ கலாநிதி **P.இராசையா**
(தலைமை ஆசிரியர்) மே.இ.த.பாடசாலை
**கவிஞர் க. ராஜமனோகரன்**
**திரு. சிவ பரிமேலழகர்**
**திரு. E.K. ராஜகோபால்**
(ஆசிரியர், புதினம்)
ஏற்புரை :
நூலாசிரியர் **விமல் சொக்கநாதன்**
பரத நாட்டிய விருந்து :- **திருமதி. ரோஹிணி சாந்தரூபன்**
அவர்களின் நயனாம்ருத நர்த்தனாலயா மாணவியர்
நிகழ்ச்சி முன்னிலையாளர் :- **பீட்டர் யேசுதாசன் L.L.B.**
(சட்ட அறிஞர் - ஒலிபரப்பாளர்)
விழா ஏற்பாட்டுக் குழு சார்பில் **ஸ்ரீமதி சுமதி ரகுநாதன்** (0208 680 2292)



## Mahajana Malai-2019



Carnatic Music Concert
(Theme: Thamizhum Isaiyum)
By
Kalai Mamani, Isai Perarasi
**Bhushany Kalyanaraman**

Violin: Sri Baluraguraman
Mridangam: Sri M Balachander
Gatam: Sri Abhiram Sahadevan
Genjira: Sri Kapilan Marutharajah

**13th October 2019**
Sunday, 6.00 pm (Doors open 5.30pm)
@ High Gate Murugan temple hall
200A, Archway Road ,London N6 5BA
(Underground Highgate - Northern line)

Entrance - Donations
Sponsors - £50 (per person)
Family (four)- £50
Single - £15.00 (per person)



Net proceeds to WELFARE FUND FOR STUDENTS at MAHAJANA needing financial support

For further enquiries
Dr S Navaratnam: 07956 579 231, Mr Seyon: 07961 155 560, Mr Thavamuruganathan: 07761 666 424, Mr. V. Sivanantharajah: 07903 485 015, Mr Wimalathasan: 07801 568 925, Mr M Sathiyamoorthy: 07940 726 376, Dr Theva: 07973 287 038, Mr V R Ramanathan: 07956 369 557, Mr G Natkunan: 07984 420 113, Mr N. SriGengatharan: 07932 635 395, Dr Sivakumar: 07947 918 552, Mr Ravi Ratnam: 07963 562 468, Mr Mr & Mrs S Srikaanthalingam: 07831 195 979, Mrs Rajeswary VigneswaraRajah: 07789 252 117, Mrs Themba Suriyanarayanan: 07570 810 136, Mrs Pathmaranee: 07412 250 606, Mrs Vasantha, Navaratnam: 07503 929 492, Mrs Gowry Kumar: 07872 990 230, Dr Kalaichelvi: 07583 131 121


## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Auspicious Days, Special Poojahs & Festivals - 2018

OCTOBER- 2019 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 01 | Tuesday | Chathurthi Viratham | சதுர்த்தி விரதம் |
| | | Luxmy Poojah Starts | லக்சுமி பூசை |
| 03 | Thursday | Sasdi | சஷ்டி விரதம் |
| 04 | Friday | Saraswathi Pooja Starts | சரஸ்வதி பூசை தொடக்கம் |
| 05 | Saturday | Puradathi Sani 03 | புரட்டாதிச் சனி 03 |
| 06 | Sunday | Saraswathy Pooja, Ayutha Pooja | சரஸ்வதி பூசை, ஆயுத பூசை |
| 07 | Monday | Vijayatasami–Vanni Vaalai Cutting | விஜயதசமி, வன்னி வாழை வெட்டு |
| | | Kethara Gowri Viratham Starts | கேதாரகௌரி விரதம் தொடக்கம் |
| 09 | Wednesday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 10 | Thursday | Prathosa Viratham | பிரதோச விரதம் |
| 12 | Saturday | Sri Nadesar Abishegam–5 | நடேசர் அபிசேகம்–5 |
| | | Puradathi Sani–4 | புரட்டாதிச்சனி 4 |
| 13 | Sunday | 6.00 a.m. : Shandy Homam, Full Moon | சண்டிஹோமம் – பூரணை |
| 16 | Wednesday | Kaarthikai Viratham | கார்த்திகை |
| 17 | Thursday | Sankadahara Chathurthi | சங்கடகரசதுர்த்தி |
| 18 | Friday | Ippasi Velli–1 | ஐப்பசி வெள்ளி–1 |
| 21 | Monday | Apa padcha Astami | அபரபட்ச அட்டமி |
| | | Kanthapurana Song & Explanation Starts | கந்தபுராண பாடலும், விளக்கவுரையும் தொடக்கம் |
| 24 | Thursday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 25 | Friday | Prathosa Viratham | பிரதோச விரதம் |
| | | Ippasi Velli–2 | ஐப்பசி வெள்ளி – 2 |
| 27 | Sunday | Amaavaasai Viratham | அமாவாசை விரதம் |
| | | Deepaavali | தீபாவளி |
| | | Keethara Gowri Viratham Ends | கேதார கௌரி விரதம் – முடிவு |
| 28 | Monday | Kanthasasdy Viratham 1 | கந்தசஷ்டி விரதம் – 1 |
| 29 | Tuesday | Kanthasasdy Viratham 2 | கந்தசஷ்டி விரதம் – 2 |
| 30 | Wednesday | Kanthasasdy Viratham 3 | கந்தசஷ்டி விரதம் – 3 |
| 31 | Thursday | Kanthasasdy Viratham 4 | கந்தசஷ்டி விரதம் – 4 |

# விமலின்  பக்கம்

இலங்கையில் ஆங்கில பிரிட்டிஷ் ஆட்சி அகன்று சிங்கள-தமிழ்-முஸ்லிம் மக்களின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு அமைந்தது வரலாறு. மேட்டுக் குடி மக்களின் நிர்வாகம் ஆங்கில மொழியில் நடத்தப்பட்டது. இதனை தனக்குச் சாதகமாக்கி சாமான்ய சிங்கள மக்களின் வாக்குகளைக் கவர “தனிச் சிங்கள மொழியே” என்ற கோஷத்துடன் புறப்பட்டவர்தான் கோட்டும் சூட்டும் போட்ட சிங்கள - மேட்டுக் குடி வர்க்கத்தைச் சேர்ந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா.




1956 இல் தனி சிங்கள சட்டத்தை எதிர்த்து கண்ணியமான M.P.களின் வெளி நடப்பு

இலண்டனில் படித்து பட்டம் பெற்ற இந்த சாணக்கியர் இலங்கை வந்ததும் தனது கோட்டையும் சூட்டையும் களைந்து விட்டு சிங்களத் தேசிய உடை அணிந்து வாக்குச் சேகரிக்கப் புறப்பட்டார்.

அப்பாவிச் சிங்கள மக்கள் இந்த ஏமாற்றுக்காரனை நம்பி வாக்களித்து பச்சைநிற ஆட்சியைத் தோற்கடித்து நீல நிற கட்சியை அரசாங்கமாக்கினார்கள்.

வந்தது “சிங்களம் மட்டும்” என்ற சட்டம். கண்ணியமான கனவான்களை அப்போது கொண்டிருந்த நாடாளுமன்றத்தில் இருந்து சிங்கள தமிழ் எதிர்க் கட்சியினர் வெளியேறினார்கள்.

2018 ஒக்டோபரில் நாடாளுமன்றம் கண்ட M.P. காடையர்களின் வெறித்தனம் அப்போது இருக்கவில்லை. தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், இரும்பு மனிதர் டாக்டர் நாகநாதன், அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் உட்பட அப்போதைய தமிழினத் தமிழர்கள் பலர் கொழும்பு காலிமுக கடற்கரையில் - அப்போதைய நாடாளுமன்றக் கட்டடத்திற்கு முன்னால் காந்திஜி காட்டிய வழியில் ‘சத்தியாக்கிரகம்’ - அறவழிப் போராட்டம் நடத்தினார்கள்.



இந்திய மத்திய அமைச்சர் அமித் ஷா

நாடாளுமன்றத்தில் பண்டாரநாயக்கா அரசு கொண்டு வந்த “சிங்களம் மட்டும்” சட்டம். 1956-ல் இலங்கை இனங்களைப் பிரித்தது, இனக் கலவரங்களை பல தடவைகள் நடத்தியது. தமிழ் இனத்தின் கனவுகளை தகர்த்து வீசியது.

56-ன் பின்னர் 58 வந்தது, 58-ன் பின்னர் 77, பிறகு 83. இப்படி ஆண்டுகள் வந்து போய்க் கொண்டிருந்தன. போகும் போது அப்பாவித் தமிழர்களின் உயிர்களையும் அள்ளிக் கொண்டு போயின.

பண்டாரநாயக்க போலவே அவருக்குப் பிந்திய அரசியல்வாதிகளும் சிங்கள வாக்காளர்களைக் கவர தீவிர விஷக் கருத்துக்களை அள்ளி வீசி சிங்கள மக்கள் மனதில் விதைத்தார்கள்.



நாட்டு மக்களின் அஞ்சலி

சிங்கள இளவரசன் (துஷ்ட)கைமுனு தமிழ் அரசன் எல்லாளனுடன் போர் தொடங்க முன் தன் கருத்தை வலியுறுத்துவதற்காக படுக்கையில் தன் கை-கால்களை மடக்கி வைத்துக் கொண்டு, “என்னால் கை-கால்களை நீட்ட முடியவில்லை, வடக்கே தமிழர்கள் - மேற்கே கடல்” என்று முறையிட்டானாம்.

எல்லாளனுடன் துட்டகைமுனு போர் நடத்தியது வரலாறு. கைமுனுவின் விதண்டாவாதம் இன்றைய சிங்களவர்கள் மத்தியில் குறைந்து விடக்கூடாது என்பதற்காக ஒரு நூலை தமது அடிப்படை ஆதாரமாகக் காட்டியபடி இருக்கிறார்கள் சிங்கள வெறியர்கள். அந்த நூலின் பெயர் ‘மஹா வம்சம்’.

அதாவது “மிகப் பெரிய - பிரமாண்டமான முக்கியமான வம்சம் தமது சிங்கள வம்சம்” என்று வலியுறுத்துகிறது இந்த நூல்.

பொய்யும் புரட்டும் ஆதாரங்களுமற்ற தகவல்களைக் கொண்ட இந்த நூல் சிங்களவர்கள் மட்டும்தான் இலங்கையின் பூர்வீக இனம்! மற்ற அனைவரும் பின்னால் வந்த வந்தேறு குடிகள்தான் என்று வீறாப்புடன் போதிக்கிறது.

இப்படியாக எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க என்ற அரசியல்வாதி தன் சிங்கள மொழியை தனிச் சிங்கள சட்டமாக நாட்டில் பரப்ப 1956-ல் முற்பட்டதன் விளைவு இன்று 63 ஆண்டுகளாகியும் பரஸ்பர நம்பிக்கையீனமாக இரு இனங்களையும் இரு துருவங்களாகப் பிரித்திருக்கிறது.



2018இல் சிங்கள M.P.கள் நடத்திய காடைத்தனம்

இலங்கை என்ற சின்னஞ் சிறிய நாட்டில் ஓர் அரசியல்வாதியின் பொறுப்பற்ற செயலினால் பல்லாயிரம் உயிர்கள் பலியிடப்பட்டு, கோடானு கோடி ரூபா பண நஷ்டம் ஏற்பட்டும்கூட பெண்ணாம் பெரிய அயல் நாடான இந்தியாவில் ஒரு முக்கிய அரசியல்வாதி மோடியின் உள்துறை அமைச்சர் அமித் ஷா பொறுப்பற்ற முறையில் கருத்து வெளியிட்டு இந்தியாவின் எல்லா மாநிலங்களினதும் எல்லாக் கட்சிகளுக்கும் ஆத்திரமூட்டியிருக்கிறார்.

“இந்தியாவில் இன்று 122 மொழிகள் பேசப்படுகின்றன - நாட்டை ஒருமைப்படுத்தக் கூடிய ஒரே மொழி ஹிந்தி மொழி ஒன்றுதான் - முழு நாட்டுக்குமான ஒரே மொழியாக ஹிந்தி மொழி பயன்படுத்தப்பட வேண்டும் - உலகின் பிற நாடுகளில் இந்தியாவின் அடையாளமாக ஹிந்தி மொழியே திகழ வேண்டும்” என்று கூறியிருக்கிறார் மத்திய அரசின் உள்துறை அமைச்சர் அமித் ஷா.

தமிழ்நாட்டின் கட்சிகளும் பெங்களூரு கட்சிகளும் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளன. மத்திய அமைச்சர் அமித் ஷா இந்தக் கருத்துக்களை திரும்பப் பெறவேண்டும் என்று ஆளும் அதிமுக கட்சிகளும் ஸ்டாலின் தலைமையிலான திமுக உட்பட்ட எதிர்க் கட்சிகளும் குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

இலங்கையில் நாளை தமிழர்களுக்குச் சாதகமான ஒருவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றாலும் கூட, ‘சிங்களம் மட்டும்’ என்ற 1956-ம் ஆண்டு சட்டத்தை திரும்பப் பெறமாட்டார் - பெறவும் முடியாது.

அதேபோல இந்தியாவின் அமித் ஷாவின் ஹிந்தி மொழி பற்றிய கருத்துக்கள் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்த முன்னர் மோடி அரசு ஆவன செய்யும் என்று எதிர்பார்ப்போம்.

## சுய விளம்பர பதாகைகளும் அவை எடுக்கும் உயிர்ப் பலிகளும்!

எங்களில் பலர் தமிழ்நாட்டுக்கு அடிக்கடி சென்றிருப்போம். அங்கு எதைக் கண்டோமோ, காணவில்லையோ எங்கள் பார்வையையும் சிந்தனையையும் சிதறவிடாமல் தம்பால் ஈர்த்து வரும் பிரமாண்டமான பதாகைகளை நிச்சயம் கண்டிருப்போம்.


**“எங்கள் தமிழ் தாயே அம்மா!”**
பிறந்த நாள் வாழ்த்துக்கள்!

இப்படிக்கு
ஆலங்குடி, அன்னராசா

என்று தன் படத்துடன் ஒரு பதாகை நாட்டியிருப்பார் ஒரு விளம்பரப் பிரியர். அரசியல் காரணங்களுக்காக மட்டுமல்லாமல் அரசியல்வாதிகளின் குடும்ப விழாக்கள், காதுகுத்து சடங்குகள் என இப்படி எல்லாவற்றிற்கும் பதாகைகள் நாட்டுவது ஒரு கலாச்சாரமாக மாறிவிட்டது.

இந்தக் கலாச்சாரம் உயிரைப் பறிக்கும் ஓர் ஆபத்து நிறைந்த பழக்கம் என்பது காலம் காலமாக சுட்டிக் காட்டப்பட்டும் யாருமே இதனை கடந்த மாதம் செப்டம்பர் 15 வரை பொருட்படுத்தவே இல்லை.

சென்னையில் பல்லாவரம் தொகுதிப் பாக்கம் பாதையில் பள்ளிக்கருணை என்ற தெருச் சந்தியில் தனது புதல்வனின் திருமணத்தை அறிவித்து தமக்கான புதாகை ஒன்றை நாட்டியிருந்தார் அவ்வூரின் முன்னாள் அதிமுக கவுன்சிலர் ஜெயகோபால். செப்டம்பர் 12-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் இந்தப் பதாகை உடைந்தபோது வேலை முடிந்து தனது மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த 22 வயதான சுபஸ்ரீ என்ற கணனி மென் பொறியியலாளர் யுவதி மீது விழுந்தது. அவர் நிலை தடுமாறி மோட்டார் சைக்கிளில் ???? இருந்து தெருவில் வீழ்ந்ததும் பின்னால் வந்த லொறி ஒன்று அவர் மீது ஏறியது, சுபஸ்ரீ அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.



அரசாங்கமும் போலீஸும் பலியிட்ட யுவதி சுபஸ்ரீ

சுபஸ்ரீ தன் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. இச்சம்பவம் நடந்த சில மணி நேரங்களில் நீதிமன்ற உத்தரவில் முக்கிய தெருச் சந்திகளில் நாட்டப்பட்டிருந்த பதாகைகள் அனைத்தையும் அகற்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

சினிமாக்காரர்களும் உடனடியாகத் தொலைக்காட்சிகளில் பேட்டி கொடுத்து தமது சினிமாப் படங்கள் வெளியிடப்படும்போது தமது தம்பிகள், குஞ்சுகள் யாரும் ‘கட் அவுட் பதாகைகளைத் தெரு வீதியில் வைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டனர்.


சினிமாக் கதாநாயகர்களும் அவர்களின் விசிலடிச்சான் குஞ்சுகளும் அரசியல்வாதிகளும் அவர்களைக் காக்காய் பிடிக்கும் அடிவருடிகளும் நீதிமன்றத் தடை உத்தரவுகளை மதித்து நடந்திருந்தால் 22 வயது சுபஸ்ரீ இன்று உயிருடன் இருந்திருப்பார்.

ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் குடும்ப விழாக்கள் பற்றி நாட்டப்படும் பதாகைகளைக் கவனிக்காமல் வரும் காவல் துறையினர் தமது கடமைகளைச் சரிவரச் செய்திருந்தால் ரவி தம்பதிகள் தமது ஒரே புதல்வி சுபஸ்ரீயை இழந்திருக்க மாட்டார்கள்.

*wimalsockanathan@gmail.com*


Sky Wings Travel
25
Your Travel Is Our Passion...
SriLankan
Talk to our Specialists in
TAMIL
Direct Flight
From
£ 523
SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT
QATAR AIRWAYS £489
Emirates £519
KUWAIT AIRWAYS £439
WORLDWIDE SPECIALS
CHENNAI Fr £377
TRICHY Fr £381
DELHI Fr £369
KUALA LUMPUR Fr £441
SINGAPORE Fr £447
MELBOURNE Fr £588
AUCKLAND Fr £420
NEW YORK Fr £380
SYDNEY Fr £591
TORONTO Fr £344
119 Tooting High Street, London, SW17 0SY
IATA
0208 672 9111
5766 ATOL PROTECTED
Above fares are subject to availablity - T&Cs apply

சக்தி சக்திதாசன்





# பல முனைத் தாக்குதல்கள் தத்தளிக்கும் பிரதமர் பொரிஸ்



**கா**லம் என்பது யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அது தன்பாட்டுக்கு தன் வேகத்தில் ஓடிக்கொண்டேயிருக்கிறது. இங்கிலாந்துப் பிரதமர் எனும் காரணத்துக்காக திரு.பொரிஸ் ஜான்சன் அவர்களுக்காக காத்திருக்கப் போகிறதா என்ன?

அப்படி என்ன பிரச்சனை இங்கிலாந்துப் பிரதமருக்கு என்று என்கிறீர்களா? அவரது எதிர்காலத்தையே நிர்ணயிக்கப் போகும் அந்தக் காலக்கெடுவான அக்டோபர்31 எனும் தேதியைக் காலம் அவரை நோக்கித் தள்ளிக் கொண்டேயிருக்கிறது.

எமது முந்தைய பிரதமர் திருமதி.தேரேசா அம்மையாரின் ப்ரெக்ஸிட் நோக்கிய நகர்வுகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

அவருடைய ஐரோப்பிய ஒன்றியத்துடனான பேச்சுவார்த்தைகளில் அவர் இங்கிலாந்துக்காக சரியான முறையில் வாதங்களை முன்வைக்கவில்லை.

இக்குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவற்றுக்கு முற்றும் முரணாக தன்னால் இங்கிலாந்தின் ப்ரெக்ஸிட் சம்பந்தமான பிரச்சனைக்கு ஒரு தீர்வினைப் பெற்றுக் கொடுத்திட முடியும் எனும் முழக்கத்தோடு பிரதமர் நாற்காலியில் அமர்ந்தவர் நமது பிரதமர் பொரிஸ் ஜான்சன்.

அவரது இந்நுழைவுக்கு உதாரணமாக கண்ணாடிப் பொருட்கள் நிறைந்த அறைக்குள் சீறிக்கொண்டு நுழைந்த ஒரு காளை மாட்டினைக் குறிப்பிடலாம்.

பிரச்சனையை எதிர்கொள்வதற்காக மிகவும் தீவிரமான செயற்பாடுகளைக் கைக்கொண்டார் பிரதமர்.

எதுவித உடன்படிக்கையுமில்லாமல் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதற்கு ஐக்கிய இராச்சிய,ம் தயாராக உள்ளது எனும் நிலைப்பாட்டினை மிகவும் தீவிரமாக வலியுறுத்தினார்.

உடன்படிக்கையில்லாமல் விலகுவது என்பதே தனக்குப் பிடித்தமான தீர்வு என்பது போலக் காட்டும் முகமாக நடந்து கொண்டார். ஐக்கிய இராச்சியம் உடன்படிக்கையில்லாமல் விலகும்போது எதிர்கொள்ளக்கூடிய பிரச்சனைகளைச் சமாளிக்கும் திட்டங்களைத் தீட்டும் பணிக்காக ஒரு குழுவினை அமைத்தார்.

அதற்கான ஒரு அமைச்சரை நியமித்து அதற்கான பணிகளின் முன்னேடுப்புக்காக நிதியமைச்சரின் மூலம் பெரும்தொகையினை ஒதுக்கினார்.

சுதாரித்துக் கொண்டது பிரித்தானிய பாராளுமன்றம். உலகத்தின் ஜனநாயகத்துக்கு முன்னோடி எனக்கருதப்படும், பாராளுமன்ற அரசியலின் தாய்ப் பாராளுமன்றம் எனக்கருதப்படும் பிரித்தானிய பாரளுமன்றத்தின் அபிப்பிராயத்தை ஓரங்கட்டுவதா?

வெகுண்டெழுந்தது பாராளுமன்றம் . பிரதமரின் கட்சிப் பாராளுமன்ற அங்கத்தினர்களில் பிரதமரின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்ட சுமார் 23 பேர் எதிர்க்கட்சியின் கோபத்திலிருந்த நியாயத்தை புரிந்து கொண்டனர். அவர்களோடு கூட்டுச் சேர்ந்தனர்..

பாராளிமன்ற ஜனநாயகத்திற்குவிடப்படும் சவால் என்றார் சபாநாயகர். இவர் கூட அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற அங்கத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்கட்சிகளின் பாராளுமன்ற அங்கத்தினர்கள் இந்த ஒரு விடயத்தில் கூட்டுச் சேர்ந்தனர். ஐக்கிய இராச்சியம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து உடன்படிக்கையில்லாமல் வெளியாற முடியாது,

உடன்படிக்கையொன்றை எட்டுவதற்கு மேலும் ஒரு கால வகாசத்தை பிரதமர் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து கோர வேண்டும் என்பதை சட்டமாக்கியது.

இங்கிலாந்துப் பாராளுமன்றம், இங்கிலாந்துப் பிரதமரின் கைகளுக்கு ஒரு சிறு முடிச்சுப் போட்டது. இந்நிலையில் நான் மக்களுக்கு வாக்களித்தபடி அக்டோபர்31ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதிலுள்ள சிக்கலைப் புரிந்து கொண்டார் பிரதமர்.

தனது பாராளுமன்றத்தைக் கலைத்து வரும் அக்டோபர் மாதம் 15ம் திகதி ஒரு பொதுத்தேர்தலை நடத்துவதன் மூலம் மக்களின் அபிலாஷையை தெரிந்து கொள்ளலாம். அவர்கள் என்னைத் தெரிவு செய்தால் நான் அக்டோபர்31ம் திகதி வாக்களித்தபடி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஐக்கிய இராச்சியத்தை வெளியேற்றுவேன் என்று அதற்கான அனுமதியை பாராளுமன்றத்திடம் கோரினார்.

என்னே ஆச்சரியம் ! அவரது இக்கோரிக்கை பாராளுமன்றத்தில் இரண்டுமுறை தோற்கடிக்கப்பட்டது. இதோ ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறி தனது கோரிக்கைகளுக்கு எதிராக வாக்களித்த தனது கட்சிப் பாராளுமன்ற அங்கத்தினர்களில் 21 பேரை கட்சியிலிருந்து தூக்கி எறிந்தார்.

ஏற்கனவே தத்தளித்து நடந்து கொண்ட ஒருவனினது கால்களை முறித்து விட்டது போல நோண்டி அரசாங்கம் மேலும் முடமாக்கப்பட்டது. முற்றான சிறுபான்மை அரசாங்கமாக இப்போது தத்தளிக்கிறது.

ஏற்கனவே இங்கிலாந்து மகாராணியாடுடன் கலந்தாலோசித்து பாராளுமன்றத்தை செப்டெம்பர் 9ம் திகதியிலிருந்து அக்டோபர் 14ம் திகதி வரை மூடி விட்டார்.

தனது அமைச்சரவை தனது எஞ்சிய பதவிக்காலத்தில் தமது கொள்கைப்பிரகடனப்படி எடுக்கப்போகும் நடவடிக்கைகளை ஒரு புதிய பாராளுமன்றத் தொடரைத் திறந்து வைத்து மகாராணியார் அறிவிப்பார். இதுவே பாராளுமன்றத்தினை மூடியதன் காரணம் என்றார்.

இல்லை. ஐரோப்பிய ஒன்றியத்துடன் எவ்வித உடன்படிக்கையுமில்லாமல் ஐக்கிய இராச்சியத்தை வெளியேற்றத் துடிக்கும் தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களினதும் முடிவின் மீதான பாராளுமன்ற விவாதங்களுக்கான காலத்தை குறைப்பதற்காக எடுக்கப்பட்ட சட்டவிரோதமான, ஜனநாயகத்துக்கு முரணான முடிவு என்கிறார்கள் எதிர்க்கட்சியினரும், அவர்களோடு சேர்ந்தவர்களும்.

ஒருமுமை, இருமுனை,மும்முனை தக்குதல்கள் அல்ல பிரதமர் இன்று எதிர்கொள்வது. பலமுனைத் தாக்குதல்கள். அவரின் பாராளுமன்றத் தொடரை மூடிய நடவடிக்கை ஜனநாயக கோட்பாடுகளுக்கும், அரசியல் சாசன சட்டத்திற்கும் முரணான ஒன்று மூன்று வழக்கு மன்றங்களில் வழக்கு பல்வேறு தரப்பினர்களால் தொடுக்கப்பட்டிருக்கிறது.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் தற்போதைய இங்கிலாந்துப் பிரதமரின் நடவடிக்கை தவரானது என்று அவரது கட்சியைச் சேர்ந்த முன்னால் பிரதமர் ஜான் மேஜர் என்பவரும் வழக்குப் பதிவு செய்திருக்கிறார் என்பதுவே.

இவ்வழக்குகளில் ஸ்கொட்லாந்து நகரில் போடப்பட்ட வழக்கு பிரதமரின் நடவடிக்கை தவறானது என்றும், இங்கிலாந்து நகரில் போடப்பட்ட வழக்கில் அவரது நடவடிக்கை அரசியல் நடவடிக்கை அதிலே சட்டத்துக்கு இடமில்லை என்று அவருக்குச் சாதகமாகவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்விரண்டு வழக்குத் தீர்ப்புகளுக்கும் எதிரான மேல்முறையீட்டு வழக்குகள் இப்போது நீதிமன்றத்தில் இருதரப்பினாலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் தீர்ப்புகள் இவ்வார இறுதியில் வெளிவரலாம்.

இத்தீர்ப்பு பிரதமருக்கு எதிராக கூறப்பட்டால் அவரால் கலைக்கப்பட்ட பாராளுமன்றம் உடனடியாக மீண்டும் கூட்டப்பட வேண்டும். அத்துடன் இங்கிலாந்து மகாராணியாருக்கு அவர் தவறான அறிவுரையைக் கூறியிருக்கிறார் என்றும் கருதப்படும்.

இத்தனைக்கும் மத்தியில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் தன்னால் இன்னமும் ஒரு உடன்படிக்கையை எட்ட முடியும் என்று பிரதமர் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் அவரோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பவர்களோ இதுவரை ஐக்கிய இராச்சியத்தின் தரப்பில் ஏற்கனவே இருதரப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்குப் பதிலாக மாற்று உடன்படிக்கை எதுவும் கையளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி உலக்கியதாம் என்று ஒரு பழமொழி ஊரில் கூறுவதுண்டு. அதுபோல இதுவரை மௌனியாகப் பார்வையாளராக இருந்த இந்தப் பிரச்சனையின் மூலகாரணமான சர்வஜன வக்கெடுப்பை நடத்திய முன்னால் பிரதமர் டேவிட் கமரன் இப்போது பேச ஆரம்பித்திருக்கிறார்.

அவரது கருத்துக்கள் ஒவ்வொன்றும் இலக்கு மீது பாயும் அம்பு போன்று பிரதமர் பொரிஸ் ஜான்சன் மீது ஒவ்வொன்றாய்த் தாக்குகிறது.

இன்றைய செய்திகளின்படி ஐக்கிய இராச்சியத்தின் தரப்பில் இம்மாத இறுதிக்குள் அதாவது செப்டெம்பர் மாத இறுதிக்குள் மாற்று உடன்படிக்கை கையளிக்கப்படாவிட்டால், உடன்படிக்கையற்ற விலகலைத் தடுக்க முடியாது எனும் கருத்து ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஒலித்துள்ளது.

நதியின் வெள்ளம், கரையினில் நெருப்பு இரண்டுக்கும் நடுவே பாவம் பொரிஸ் ஜான்சன். ●

# World Tour Store

## கொழும்பிற்கான சிறந்த பிரயாண ஏற்பாடு செய்ய எம்மை நாடுங்கள்

**15 YEARS**
**of trusted service**

# COLOMBO fr £471

## Worldwide Flight Deals

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Dubai | fr £302 | Toronto | fr £390 | Chennai | fr £388 |
| Hyderabad | fr £452 | Delhi | fr £391 | Bangkok | fr £402 |
| Kochi | fr £412 | Goa | fr £474 | Singapore | fr £404 |
| Mumbai | fr £372 | Abu Dhabi | fr £331 | New York | fr £315 |

**Visit Our New Branch at WEMBLEY**
Unit 3 A, Plaza Parade, 29-33, Ealing Road, Wembley, HA0 4YA.
**& get Amazing Discounts.**

**HURRY ! CALL NOW 020 3970 4141**

BEST DEALS CHEAP FLIGHTS BEST DEALS

**Lewisham:** 111b, Loampit Vale, Lewisham SE13 7TG

*Above fares & offers are subject to availability. T&C's Apply.

3550 ATOL PROTECTED



# மோடி மஸ்த்தானும் டிரம்ப் மச்சானும்



எப்படியிருக்கின்றீர்கள் (How do you do) என்பதன் சுருக்கம்தான் ஹௌடி என்னும் சொல்லாகும். இந்தச் சொல் அமெரிக்காவின் டெக்ஸஸ் (Texus) மாநிலத்தில் பரவலாகப் பாவிக்கப்படுகின்றது. அதையே தலைப்பாக வைத்து ஹௌடி மோடி என்னும் கூட்டம் இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்காக 2019 ஒக்டோபர் 22-ம் திகதி ஞாயிற்று கிழமை டெக்ஸஸ் மாநிலத்தில் உள்ள ஹூஸ்டன் நகரில் ஒழுங்கு செய்யப்பட்டது. என். ஆர் ஜீ காற்பந்தாட்ட அரங்கில் நடந்த இந்தக் கூட்டத்தில் 50,000 மக்கள் கலந்து கொண்டனர். ஒரு வெளிநாட்டுத் தலைவருக்காக முன்பு எப்போதும் இல்லாத அளவு கூட்டம் மோடிக்காக கூடியது சேர்ந்தது. அதில் டிரம்பும் கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்தின் முதலாவதாக 400 கலைஞர்கள் கலந்து கொண்ட 90 நிமிட கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. நரேந்திர மோடி ஆங்கிலத்திலும் இந்தியிலும் பேசினார். “டிரம்ப் சர்க்கார்” (டிரம்ப் அரசு) அவர் அடிக்கடி பாவித்த சொற்றொடராக இருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை நடவடிக்கைக் கூட்டத்தில் (Unite Nation Climate Action Summit) கலந்து கொள்ளச் சென்ற நரேந்திர மோடிக்கு வரவேற்பளிக்கும் முகமாகவே ஹௌடி மோடி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. இந்தியாவில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு பல் வேறு இடங்களில் இருந்து கொண்டு வந்து இறக்குவது போல் இந்தக் கூட்டத்திற்கு அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் இருந்து இந்தியர்கள் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். அவர்களை கவர்வதற்கே கலை நிகழ்ச்சியும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மோடி கூட்டத்தில் பேச ஆரம்பிக்கும் போது டிரம்ப் இருக்கவில்லை பின்னர் வந்து பார்வையாளர் வரிசையில் அமர்ந்து கொண்டார். இந்தப் புவியின் அரசியலைத் தீர்மானிக்கும் டிரம்பைச் சந்திக்கும் போதெல்லாம் தனக்கு உற்சாகம் பிறக்கின்றது என்றார் மோடி. 2017 டிரம்ப் தனது குடும்பத்தை எனக்கு அறிமுகம் செய்தார் இப்போது நான் எனது குடும்பத்தை அவருக்கு அறிமுகம் செய்கின்றேன். எனது குடும்பத்தில் நூறு கோடி பேர் இருக்கின்றனர் என்றார் டிரம்ப்.

கூட்டத்தில் மோடியும் டிரம்பும் ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொண்டனர். 2020இல் அதிபர் தேர்தலை எதிர் கொள்ளும் டொனால்ட் டிரம்பிற்கும் 2019 ஒக்டோபரில் மஹாராஸ்டிரா, ஹரியான ஆகிய மாநில சட்ட சபைகளுக்கான தேர்தலையும் இந்தியாவின் 18 மாநிலங்களில் 64 சட்ட சபைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலை எதிர் கொள்ளும் நரேந்திர மோடிக்கும் பரப்புரை செய்யும் முகமாக இக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதாக அமெரிக்காவிலும் குற்றம் சாட்டப்படுகின்றது. டிரம்ப் ஆரபித்த சீனாவுடனான வர்த்தகப் போரால் அமெரிக்காவின் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கு டிரம்ப் ஒதுக்கியுள்ள 28பில்லியன் டொலர் பெறுமதியான மீட்பு நிதி விவசாயிகளை திருப்திப் படுத்த வில்லை. விவசாயிகளின் அதிருப்தியால் இழந்து போயுள்ள தனது வாக்குகளை அமெரிக்கா வாழ் இந்தியர்களின் வாக்குகளை கவர்வதலீடு செய்ய டிரம்ப் முயல்கின்றார் எனவும் அதற்கு மோடிக்கு ஒழுங்கு செய்யப்பட்ட ஹௌடி மோடி கூட்டத்தை பயன்படுத்துகின்றார் எனவும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் செய்யப்பட்ட 9/11 தாக்குதலினதும் இந்தியாவின் மும்பாய் நகரில் செய்யப்பட்ட 26/11 தாக்குதலினதும் சூத்திரதாரிகள் எங்கு கண்டு பிடிக்கப்பட்டார்கள் என்னும் கேள்வியை டிரம்பின் முன்னிலையில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி எழுப்பினார்.

டொனால்ட் டிரம்பின் தலைமையிலான அமெரிக்காவிற்கு உறுதியானதும் வலிமை மிக்கதுமான புதிய நட்பு நாடுகள் அவசியம் தேவைப்படுகின்றது. ஐநா மாநாட்டில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்ற ஜேர்மனிய அதிபரை நட்பற்ற முறையில் புறம் தள்ளினார் டிரம்ப். டிரம்பினது ஆட்சியில் அமெரிக்காவில் இருந்து மேற்கு ஐரோப்பா விலகும் அபாயம் உருவாகியுள்ளது என அமெரிக்க அரசியல் ஆய்வாளர்கள் குற்றம் சுமத்துகின்றார்கள்.

### டெக்ஸஸ் (Texus) மாநிலத்தில் டிரம்ப் வாக்கு வேட்டையாடினாரா?

இந்தியாவின் பெருமை மிகு வெளியுறவுக் கொள்கைக்கு களங்கம் ஏற்படுத்தி விட்டார் மோடி என இந்திய எதிர்க் கட்சியான காங்கிரசுக் கட்சி குற்றம் சாட்டுகின்றது. இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற கொள்கைய ஜவகர்லால் நேரு இந்தியாவின் வெளிவிகாரக் கொள்கையாகவும் இந்தியாவில் பஞ்சசீலக் கொள்கையில் ஒன்றாகவும் நேரு உருவாக்கினார். நேருவின் கொள்கைகள் செயற்பாடுகள் எல்லாவற்றையும் மறுதலிக்கும் இந்துத்துவாவாதிகளுக்கு அமெரிக்கத் தேர்தலில் டிரம்பின் வெற்றிக்கு மோடி மறைமுகப் பரப்புரை செய்வது தவறாகத் தோன்றவில்லை. மோடி கூறிய:

1. டிரம்பின் தலைமைத்துவ உணர்வை நான் ஆராதிக்கின்றேன்.
2. அமெரிக்கா மீது டிரம்ப் தீவிர பற்றுக் கொண்டுள்ளார்.
3. ஒவ்வொரு அமெரிக்கர்கள் மீதும் அவர் அதிக கரிசனை கொண்டுள்ளார்.
4. அமெரிக்காவை மீண்டும் பெரிய நாடாக்குவதில் டிரம்ப் வலிமை மிக்க சங்கற்பம் பூண்டுள்ளார்.
5. ஏற்கனவே டிரம்ப் அமெரிக்கப் பொருளாதாரத்தை வலிமையுறச் செய்துள்ளார்.
6. அமெரிக்காவிற்குமாகவும் உலகிற்குமாகவும் அவர் பெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளார்.
7. இந்தத் தடவை டிரம்பின் அரசுதான்

2014-ம் ஆண்டு இந்தியப் பாராளமன்றத்தின் மக்களவைக்கான தேர்தலின் போது இந்தத் தடவை மோடியின் அரசுதான் என்ற வரி மோடியின் தேர்தல் பரப்புரையின் போது பாவிக்கப்பட்டது. அந்த வரியை ஹூஸ்டனில் டிரம்பிற்காக மோடி மாற்றி வாசித்துள்ளார். வெளிநாடுகளில் வாழும் இந்திய வம்சாவழி நடுநிலை அரசியல் ஆயவாளர்கள் மோடி எல்லை மீறி செயற்பட்டுள்ளார் எனக் குற்றம் சாட்டுகின்றனர்.

### அமெரிக்க சீன வர்த்தகப் போரில் இந்தியா மீன் பிடிக்குமா?

சீனா மீது அமெரிக்கா தொடுத்துள்ள வர்த்தகப் போரில் வியட்னாமும் பங்களாதேசமும் அதிக நன்மையடைந்துள்ளன. இந்தியா இந்த வர்த்தகப் போரால் இரண்டு வகைகளில் நன்மையடைந்துள்ளது. அமெரிக்காவிற்கு இந்தியா சீனாவிலும் பார்க்க மலிவாக ஏற்றுமதிகளைச் செய்ய முடியும். வர்த்தகப் போரால் சீனாவில் முதலீடு செய்யத் தயங்கும் வெளிநாட்டவர்கள் தங்கள் முதலீடுகளை இந்தியாவை நோக்கித் திருப்பலாம். ஏற்கனவே இந்தியா மீதும் வர்த்தகப் போர் தொடுக்கப்படும் என டிரம்ப் தெரிவித்திருந்தார். அமெரிக்காவின் மருந்தாக்க கண்டு பிடிப்புக்களை இந்தியா திருட்டுத்தனமாக பிரதி செய்வதாக அமெரிக்காவில் இருந்து குற்றம் சாட்டப்படுகின்றது. டிரம்ப் இந்தியா மீது வர்த்தகப் போர் தொடுக்காமல் இருக்க மோடி டிரம்ப் நட்பு எந்த அளவிற்கு பயன்படும்? மோடி அடிக்கடி மனம் மாறக் கூடியவர். மோடியைச் சந்தித்த மறுநாள் பாக்கிஸ்த்தான் தலைமை அமைச்சர் இம்ரான் கானைச் சந்தித்த டிரம்ப் தன்னை பாக்கிஸ்த்தானின் நண்பர் என்றார். தலைப்பாகை கழற்றி எறிந்து விட்டு டிரம்ப் குல்லாவை மாட்டினாரா? •

மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் **ஆர்.தியாகராஜன்**

# உணவே ~~மருந்து~~ வியாதி!



கடந்த பல ஆண்டுகளாகப் 'புதினம்' பத்திரிகை ஊடாக உங்கள் அனைவருடனும் மருத்துவ கருத்துகளைப் பகிர்ந்து கொள்வது மிகுந்த மனநிறைவை அளிக்கின்றது. ஒவ்வொரு புதிய 'புதினம்' இதழ் வெளிவந்த உடனேயே நீங்கள் ஆர்வமுடன் தொலைப்பேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு, மேலதிக விபரங்களை ஆர்வமுடன் கேட்டறிவது மிகவும் ஆச்சரியமளிக்கின்றது. வாசகர்களது தொடர் வாசிப்பும், அதுகுறித்த கேள்விக் கணைகளும், எங்களது பொறுப்புணர்வையும், ஆய்வுகளையும் மேம்படுத்துகின்றன. அற உணர்வுடன். சரியான தகவல்களைப் பரிமாறிக் கொள்ள மேலும் ஊக்கமளிக்கின்றது.

மகாத்மா காந்தியிடம், "மக்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?" என்று கேட்ட பொழுது, அவர் சொன்னார் : "எனது வாழ்க்கையே நான் சொல்லும் செய்தி". அதன் அர்த்தம், அவரது வாழ்வு முழுவதுமே ஒரு திறந்த புத்தகம். அதுவே, 'சத்திய சோதனை'. உபதேசமும் இல்லை; ஒளிவு மறைவும் இல்லை. பொய்யும், போலியும் கலக்காத 'உண்மை'. நூறு சதவீதம் **நடந்தது - உள்ளது உள்ளபடி.**

ஹோமியோபதி மருத்துவமும் - மனிதர்களில் உண்மையாகவும், நேரடியாகவும் நடத்திய ஆய்வுகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டது. *(Based on Human Research)* அனைத்தும் மனிதகுல ஆரோக்கியம் கருதி அர்ப்பணிப்புடன் - ஜெர்மனிய மருத்துவர் டாக்டர் ஹனிமன், அவரது மனைவி, உறவினர்கள், நண்பர்கள், ஆர்வலர்கள் அனைவரும் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்பே அளித்த 'அனுபவ உணர்வுகளே' *(Personal - Experience Research)* அடிநாதமாகும். மருத்துவ உலகுக்குக் கிடைத்த அழியாக் கொடையாகும். அனைத்துமே நடந்த உண்மை தரவுகள் **- உள்ளது உள்ளபடி.**



'புதினம்' பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும் மருத்துவ ஆலோசனை மனம் திறந்த கட்டுரைகளும், நடைமுறை அனுபவக் குறிப்புகளின் சாரமே - உள்ளது உள்ளபடி உண்மை அனுபவம்.

செப்ரெம்பர் மாதத்தில் ஒரு நாள் இந்திய பத்திரிகைகள் அனைத்திலுமே முதற்பக்கத்தில் முக்கிய இடம்பிடித்த ஒரு புகைப்படமும், அதுகுறித்த செய்தியும் மிகவும் சிந்தனையைத் தூண்டியது. புகைப்படத்தில் இந்திய விண்வெளி விஞ்ஞானி சிவன் தோல்வியில் துவண்டிருப்பதும் அவரை இந்தியப் பிரதமர் மோடி தோளில் தாங்கி, அரவணைத்து ஆறுதல் கூறியதும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. எத்தனையோ விண்வெளிக் கலங்களைச் சந்திரனுக்கு அமெரிக்கா அனுப்பிய விஞ்ஞான முன்மாதிரி இருந்தாலும், வழிமுறைகள் தெரிந்திருந்தாலும் இந்தியாவின் 'சந்திராயன்' முயற்சி வெற்றி பெறாததே அந்தப் புகைப்படத்தின் செய்திக் குறிப்பு. விஞ்ஞானம் காட்டுவது 100% சரியுமல்ல; அனுபவம் காட்டுவது 100% பிழையுமல்ல. உண்மையை உணர்ந்து அறிய வேண்டியது ஒவ்வொருவரது தனிப்பட்ட பொறுப்பாகும்.

எல்லா நோயாளிகளும் மருத்துவர்களிடம் பெருவாரியாக கேட்டும் கேள்வி "என்ன சாப்பிட்டால் நோய் சுகமாகும்?" என்பதே. இரண்டாவதாக, "நோய் விரைவாகச் சுகமாக நான் மேலதிகமாக என்ன செய்ய வேண்டும்?" என்பதாகும். இரண்டு கேள்விகளுமே அவசியமற்றது; அடிப்படையில் தவறானது. என்ன காரணத்தினால், எனக்கு நோய் வந்தது? என்று சரியான கோணத்தில் சிந்தித்தால், தெளிவு கிடைக்கும்.

நம்மைக் கஷ்டப்படுத்தும் தலைவலி தொடக்கம் டயபட்டிக்ஸ், கான்சர் உட்பட பல வியாதிகளுக்கு நாம் உட்கொள்ளும் உணவே மூலகாரணமாகும். உணவே உடம்பை உருவாக்குகின்றது. உடலுக்கு 'அன்ன மய கோசம்' என்றொரு பெயருண்டு.

நமது தற்கால உலக வாழ்க்கை முறை முழுமையாக 'சிந்தனைத் திறனை' *(Mind Oriented)* சார்ந்ததாக மாறிவிட்டது. உடல் திறன் *(Physical Health)* முற்றிலுமாக அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டது. விளையாட்டு, உடற்பயிற்சி *(Games and Excersise)* போன்றவைகளிலும், தொழில் நுட்பங்களும், போதை மருந்துகளும் ஆக்கிரமித்துவிட்டன. தொழில்துறைகளில் கூட சேவையை மேம்படுத்தும் சிந்தனையைவிட, போட்டியாளரை வீழ்த்த விரும்பும் மனநிலையே மேலோங்கியுள்ளது. றிமோட் கொன்ரோல் முதல் வாகனங்கள் உட்பட ஆகாய விமானங்கள் வரை அனைத்து உபகரணங்களும் நமது உடல் இயக்கத்தை பெருமளவில் மட்டுப்படுத்திவிட்டன.



உடலின் இயக்கம் குறைவதனால் உள் உறுப்புகளின் இயக்கமும் குறைகின்றது. செயற்திறன் பாதிப்பு அடைகின்றது. உணவு செமிபாட்டுத் திறனும் குறைகின்றது. இந்நிலையில் உடலுக்கும் நாவிற்கும் நாம் கொடுக்கும் உணவு விருந்து உபசாரம், உடல் உறுப்புகளுக்குப் பெரும் சுமையாகிப் படிப்படியாக தீராத நோயாகிவிடுகின்றது.



மனித மனதின் தன்மை *(Human Mind Attitude)* உடலின் சுபாவத்திற்கு *(Body Nature)* நேர்மாறானது. வயதானாலும் இளமையாய் காட்டிக்கொள்ள ஆர்வமுடையது. அவசரமாய் இலங்கை, இந்தியா, கனடா மற்றும் உலகெங்கும் உடனடியாகப் போக விருப்பமுடையது. மனம் *Bank Balance* பற்றி கவலைப்படாது. *Credit Card*-யை பயன்படுத்தியாவது தன்னுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முயற்சி செய்கின்றது. ஆசையும் ஆர்வமும் காரணமின்றி வளர்ந்து கொண்டே போகும். 'வங்குரோத்து' *(Bankrupsy)* ஆன பின்னர் பெரும் மனச்சோர்வு *(Mental Depression)* உண்டாகும். அடுத்தடுத்து உடல் சோர்வும், டயபட்டிக்ஸ், இரத்த அழுத்தம் முதல் கான்சர் வரை வரிசை கட்டிவிடும்.

அறிவுத்திறன் சார்ந்த நவீன வாழ்க்கை முறையில் *(Modern Intelectual Life Style)* உடலின் உணர்வுகள் *(Body Feelings)* முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு, நிராகரிக்கப்படுகின்றன. பசிக்கும் போது உணவு தாமதப்படுத்தப்பட்டு, நிராகரிக்கப்படுகிறது. பசி உணர்வு இல்லாத போது விருந்து உபசாரம் நடைபெறுகின்றது. சோர்வு ஏற்படும் போது தூக்கம் நிராகரிக்கப்படுகின்றது. தண்ணீர் தாகமும், சிறுநீர் உணர்வும் மலம் கழிக்கும் உணர்வும் கூட தொடர்ந்து தள்ளிப் போடப்பட்டு, உடல் உணர்வுகளுக்குப் பெரும் அவஸ்த்தை உண்டாக்குகின்றோம். உடல் அவஸ்த்தையே ஆரோக்கிய சீர்கேட்டின் ஆரம்பம், நோயின் அடிப்படை காரணம்.

'மாத்தி யோசி' என்பது வெற்றிக்கான நவீனமந்திரம். இதுவே நோயாளிகளுக்கும் பொருந்தும். மாற்றி யோசியுங்கள். சரியான கேள்வியை மருத்துவர்களிடம் கேளுங்கள். உடல் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் தொடர்ந்து தவறுகள் செய்வதாலேயே நோய்கள் உண்டாகின்றன.

இனி மருத்துவர்களிடம் கேளுங்கள், "என்ன செய்யக்கூடாது? என்ன சாப்பிடக் கூடாது?"

யாழ்ப்பாணச் சித்தர் யோகர் சுவாமிகள் கூற்று 'சும்மா இரு' ●

**மேலதிக ஆலோசனைகளுக்கு**
**020 8144 1553**


மாதவிடாய் சீரமைப்பு சிகிச்சை
MRT
Menstrual Regulation Treatment
ஒழுங்கற்ற மாதவிடாய்
Irregular Menstruation
ESTRADIOL
OH
HO
ஹார்மோன் குறைபாடுகள்
Hormone Defects
அதீத ரத்தப்போக்கு
Over Bleeding
கர்ப்பமாவதில் சிக்கல்
Infertility
Normal ovary
Polycystic ovary
PCOD
சினைப்பை நீர் கட்டி
சிறப்பு சிகிச்சைகள்
பி.சி.ஓ.எஸ்.-ஆல் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்குத் தள்ளப்படுபவர்கள்
34%
70%
பி.சி.ஓ.எஸ். பாதிப்பு ஏற்பட்டதே தெரியாமல் வாழும் பெண்கள்
உயர் இரத்த அழுத்தம் (B.P/HyperTension)
கொலஸ்ட்ரால் (Cholesterol)
சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
மூட்டு வலி (Arthritis)
தோல் வியாதிகள் (Skin Diseases)
ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
குழந்தையின்மை (Infertility)
டயபட்டிஸ் (Diabetes)
உடல் எடை அதிகரித்தல்
Obesity
முகப்பரு
Pimples
தலைவலி
Headache
சரியான தூக்கமின்மை
Sleepless
முடிகொட்டுதல்
Hair Fall
உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை
HOMOEO CARE
இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
0044 7833341693
homoeocare
www.homoeocare.com
homoeocare@rediffmail.com

# LONDON SIVAN KOVIL TRUST

**Charity Registration No. 1051516**
**4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES.**
**Telephone Number 00 44 208 318 844 Fax Number 00 44 208 318 2108**

## VACANCY FOR A POSITION OF ASSISTANT PRIEST

The London Sivan Kovil Trust is a UK registered charity of more than 23 years standing engaged in serving the community in Southeast of England with cultural, social and religious activities. We run a Hindu Temple, a Saturday school and a meeting place for elders. We have completed building a new temple at 4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES where the previous temple stood more than 15 years at a cost more than 1.5miilion sterling pounds and it was opened for public on 12th June 2011.

We have a vacancy for a Assistant Priest position as such Applications are invited from potential candidates to fill the post of an assistant priest from suitably qualified members of the public.

### JOB DESCRIPTIONS:

Assistant priest will assist the Priests (Ministers of Religion) in their pastoral duties; in particular he will make flower garlands, prepare abisheka Thiraviyam for anointing the deities, decorate them with garlands and flowers, prepare Panchamirtham, a mixture of fruits honey and other ingredients, cook Amuthu, sacred sweet rice, Mothakam, Vadai, etc, for the Deities and then for distribution among the devotees. Assistant priest will be assigned responsibility for one or more aspects of the Annual Festival and other important religious ceremonies. Assistant priest will be reporting the senior priest/chief priest/secretary of the Trust.

**1) Applicant should meet the following requirements:**

a) Applicants must have been conferred kurukkalship in terms of Vedaagamas
b) Reasonable spoken knowledge of Tamil
c) Must be able to weave garlands of all types
d) A fair knowledge of Astrology will be considered an added advantage.

**PERQUISITES:**

(1) Board and Lodging will be provided at the Trust's premises.
(2) Annual Leave of twenty eight days which include 8dyas public holidays.
(3) One and a half days leave is available for a week.

**2. Pay and conditions of service will be discussed and agreed soon after telephone interview.**

**3. Applications close on or before 31st October 2019.**

Please send your application with supporting documents by post to the London Sivan Kovil Trust's address given above for the attention of the Secretary of the Trust, alternatively applicant can send the application and supporting documents to the temple email address given below;
sivan.kovil@yahoo.co.uk

**LONDON SIVAN KOVIL TRUST**



# LONDON SIVAN KOVIL TRUST

**Charity Registration No. 1051516**
**4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES.**
**Telephone Number 00 44 208 318 844 Fax Number 00 44 208 318 2108**

## VACANCY FOR POSITION OF PRIEST:

The London Sivan Kovil Trust is a UK registered charity of more than 23 years standing engaged in serving the community in Southeast of England with cultural, social and religious activities. We run a Hindu Temple, a Saturday school and a meeting place for elders. We have completed building a new temple at 4A Clarendon Rise, Lewisham, London SE13 5ES where the previous temple stood more than 15 years at a cost more than 1.5miilion sterling pounds and it was opened for public on 12th June 2011.

We have a vacancy for a Priest position as such Applications are invited from potential candidates to fill the post of Priest from suitably qualified members of the public.

### JOB DESCRIPTIONS:

Priest (Ministers of Religion) will conduct pooja and religious ceremony at the temple. Priest will also conduct wedding ceremony and special religious ceremonies including the annual festivals. Priest will conduct religious discos after main poojas at the temple premises. Priest will be assigned major responsibility for one or more aspects of the Annual Festival and other important religious ceremonies. Priest will be reporting the chief priest/secretary of the Trust.

**1) Applicant should meet the following requirements:**

a) Applicants must have been conferred kurukkalship in terms of Vedaagamas
b) Reasonable spoken knowledge of Tamil
c) Must be able to weave garlands of all types
d) A fair knowledge of Astrology will be considered an added advantage.
e) Relevant experience in conducting such religious services at Hindu Temples.

**Perquisites:**

(1) Board and Lodging will be provided at the Trust's premises.
(2) Annual Leave of twenty eight days which include 8 days public holidays.
(3) One and a half days leave is available for a week.

**2. Pay and conditions of service will be discussed and agreed soon after telephone interview.**

**3. Applications are to be received on or before 31st October 2019.**

Please send your application with supporting documents by post to the London Sivan Kovil Trust's address given above for the attention of the Secretary of the Trust, alternatively applicant can send the application and supporting documents to the temple email address given below; sivan.kovil@yahoo.co.uk

**LONDON SIVAN KOVIL**





# ஜோதிட மையம்

ஜாதகப் பலன்களை விரிவாகத் தெரிந்து கொள்ளவும், சகலவிதமான ஜோதிட ஆலோசனைகள் பெறவும், உங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள், திருமணத்தடை, குழந்தைப் பாக்கியமின்மை, பணமுடை, கடன் தொல்லை, உடல்நலக்குறைவு, வேலையின்மை போன்ற இன்னோரன்ன கஷ்டங்களுக்கு ஜோதிட ரீதியான தீர்வுகளைக் காணவும், அவசியமேற்படின் என்னென்ன பரிகாரங்கள் செய்யலாம் என்பதைத் தெரிந்து கொள்ளவும், உலகில் எங்கும் எந்த இடத்திலும், எந்த நாட்டிலும் குழந்தை பிறந்திருப்பினும் அந்த கோடைக்கால (அல்லது) குளிர்க்கால நேரத்தைச் சரியான கிரீன்விச் நேரத்திற்கு ஏற்ப மாற்றி பிறந்த இடத்தின் தீர்க்க, அட்ச ரேகைகளுக்கேற்ப லக்ன முதலான பன்னிரெண்டு பாவங்களையும் கணக்கிட்டு திருக்கணித முறையில் மிகத் துல்லியமான ஜாதகம் எழுதிப் பெற்றுக்கொள்ளவும் தொடர்பு கொள்வீர்.

**எஸ். ஞானச்சந்திரன்** (ஜோதிடவியல் பட்டயம் பெற்றவர்)
(ஜோதிட ஆலோசகர்)
Tel : (India) 0091-94434 57536 | Whatsapp : 91 9443457536
லண்டன் தொடர்புகளுக்கு : (London) 07944101431
E-mail : gnanasuba@gmail.com





டாக்டர். என்.ஜெகநாதன்

# அதை விட ரகசியம்

நான் ஏன் பிறந்தேன்? உயிர் என்பது என்னவாயிருக்கும் என எம் முன்னோர்கள் எண்ணி, விளங்கிக் கொள்ளும் மனம் கொண்டதால்தான் ஆன்மா, கர்மம் என்ற கருத்துக்கள் எழுந்திருக்கும். இவற்றை எடுத்துரைத்தவன் இறைவனா? அல்லது நாம் எழுத்தறிவு கொள்ளும் சிருஷ்டியானது இறைவனாலா?

யாம் (நாம்) கொள்ளும் அர்த்தமே எமக்கு யதார்த்தமாகிறது எனலாம். அணு அசைவதும் அவனால்தான். சக்தியே அவன் வடிவம் என்பது மறுப்பதற்கில்லை. யோசிப்பதில் சளைக்காத மனிதன் ஊகிப்பதில் குறைவு இருக்கவா போகிறது?

எதுவும் தோற்றம், மாற்றம் அடைய சக்தி அவசியமே. அழிவு என்பதாக நிலைமாறுவதேயன்றி வெற்றிடம் பெறுவதில்லை. எமது சரீர அமைப்பிலுள்ள மூலப்பொருள்கள் நிலை மாறியும், மாறாமலும் பிரபஞ்சத்துடன் கலப்பனவே.

பிரபஞ்சத்திலுள்ள கோள்கள், சூரிய சந்திர அமைப்புகள் இதற்கு விதிவிலக்கு என்று சொல்வதற்கில்லை. அவை கொண்டிருக்கும் ஈர்ப்பு, சுழற்சி யாவும் சக்திகளின் அடக்கமே. இச்சக்திகளுடன் ஒப்பிடும்போது எமக்கெனவுள்ள உயிர்ச்சக்தி (ஆன்மா) எம்மாத்திரம்?

மனிதனின் அறியாமைக்கு எல்லையில்லை ஆயின் பௌதிகம் (*Physical*), ஆன்மிகம் (*Spiritual*) என்று பாகுபடும் அறிவுக்குள் பெருமளவிலாக அடங்குவதாவது எது என்று சொல்லவும் வேண்டுமா? எமது பாவனைக்குள்ள சொற்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவுவனேயன்றி யாவும் யதார்த்தமானவை என்று சொல்வதற்கில்லை.

'நான்' என்பதும் கேள்விக்குரியதாகிறது. அது தனது ஆன்மாவை குறிப்பதாக ஆன்மீகவாதிகள் கருதுகிறார்கள். 'நான்' ஏன் பிரதானமாக வேண்டும்? அன்பே பிரதானம். அன்பிற்கு அடையாளம் பண்பு. அதன் வெளிப்பாடில் மனவியக்கம் பங்கேற்பதே.

நாம் பெற்றிருக்கும் உடல் ஆடை போன்ற வெளிவேஷம்; அவதாரத்திற்கமைய அது மாறும்; வாழ்க்கை நாடகத்தில் எமது கதாபாத்திரத்திற்கானது என்பன எடுகோள்கள் (*Hypothesis*). கோள்களின் (*Planets*) நிலையமைப்பு, பெயர்ச்சிகளும் எமது வாழ்க்கை முறைகளை நிர்ணயிக்கின்றன என்பது வேறு விஷயம்.

மனதிலுள்ளதை தெரிவிக்காமல் வேறுவிதமாக 'நடிப்பதை' கபட நாடகம் என்கிறோம். வாழ்க்கை நாடகத்திலும் ஒரு நாடகமா? மனவியக்கம் எத்தகையது என்பதற்கு இது ஓர் உதாரணமே. சந்தர்ப்ப சூழ்நிலைகள் இதற்கு காரணமாகின்றன என்பது தெரிந்ததுதான்!

எமது நடத்தைக்கு காரணம் ஆன்மாவினது கர்மம் எனவும், சாத்துவ / தாமச / ராட்ஷச எனும் 3 வித பிரிவுக்குரிய குணங்களை உள்ளடக்குவதான அவதாரம் பெற்று விடுவதாக அதன் வெளிப்பாடு அமைகிறது என்பதும் ஆன்மீகவாதிகள் கருத்து. உயிர், உடல் (மூளை), மனம் என்ற வேறுபாடுகளை விபரித்தலும் அவற்றின் சங்கமமாகவே எமது இயக்கங்கள் அமைகின்றன என்று கருதவே தோன்றுகிறது. பேச்சு வழக்கில் மூளையை சலவை செய்வது மனதை கெடுத்து விடுவது என்கிறோம். மன வேதனைப்படுத்துபவனை 'உயிரை வாங்குகிறான்' என்று சொல்வோம்.

உயிர் உள்ளவரை உன்னை / உன் உதவியை மறக்க மாட்டேன் என்று சொன்னவர்கள் இரண்டையும் மறந்துவிடவும் ஆகிறார்கள். மறந்து விடுவதற்கு மூளையின் பாதிப்பு காரணமாகலாம். மனவளம் பாதிக்கப்பட்டதால் மறந்துவிடவும் நேரலாம்.

உடல், மனம் இரண்டையும் இயக்கும் ஆன்மாவே என்னைக் குறிப்பதாக முக்கியத்துவம் வழங்குவதால் இப்பிறவியின்போது செய்யக்கூடியது என்ன? துய்மையான ஆன்மாவிற்குரிய அன்பு, அமைதி, ஆனந்தம் என்ற இயல்புகளை இழப்பதால் நாம் அவஸ்தைப்படுவதாகவும் அவற்றை மீளப்பெற பக்தி, தியான முறைகள் உள்ளன எனவும் நம்பப்படுகிறது. இவை மூலம் மனம் பண்பட்டுவிடும் என்ற உத்தரவாதம் உள்ளதா?

மனதைப் பண்படுத்துவதும் மண்ணைப் பண்படுத்துவதுபோலவே. மண்ணை பண்படுத்த இயந்திரம் உள்ளதுபோல் மந்திரம், தந்திரம் மூலம் மனதை பண்படுத்திவிட முடியுமா?

மனப்பண்பாட்டின் அடையாளம் அன்பு, அதை வலியுறுத்துவதாகவும் 'அன்பே சிவம்' எனப்படுகிறது. தூய / நேர்மையான அன்பு அவ்வாறானது, அரியது. தமக்கிடையில் அனுகூலமாக (*Mutual Benefit*) அமைய மட்டுமென அன்பு அமைவதில் பண்பு இல்லை. நிபந்தனையற்ற (*Unconditional*) அன்பே உயர்ந்ததாகிறது.

'அன்புக்குமுண்டோ அடைக்குந்தாழ்' என்பது திருக்குறள். அளவுக்கு மீறியதாக அன்பு செலுத்துபவர் மனதில் என்னவித எண்ணம் கொண்டிருக்கலாம் என நாம் உணர முடியுமா? அன்பின் கருத்தை விதம்விதமாக அர்த்தம் கொள்வதும் வம்பில் மாட்டி விடலாம்.

பந்தபாசத்தின் வெளிப்பாடாக அன்பு அமைகிறது. பந்தம் (*Bond*) என அமையும்போது நிபந்தனை(கள்) உடன் சேருவதும் இயல்பே. அவற்றின் நிர்ப்பந்தமே பந்தபாசத்திற்கு சவால் ஆகலாம். தாய் சொல்லை தட்டாதே, தந்தை சொல் மிக்கதோர் மந்திரம் இல்லை என நல்லொழுக்கத்திற்கென உபதேசித்தாலும் பந்தத்தின் முக்கியத்துவத்தையும் அவை உணர்த்துகின்றன. பிள்ளைகளை பெற்றோர்கள் கண்டிக்கும் கடுமையை, கொடுமையாக கருதுவதாக தற்காலம் வந்துவிட்டது.

உறவுகளுக்கிடையில் பந்தம் நிலைக்கவெனின் அவரவர்கள் தம் மனவியக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும். தத்தமது ஆன்மாக்களின் தன்மை-பொருத்தம், கவர்ச்சியாக அவை அமைவது என்ற நம்பிக்கை கைகொடுக்குமாறு இல்லை.

மற்றவரை கட்டுப்படுத்தலில் கட்டுப்பாடு, அல்லது விட்டுக்கொடுக்கும் தன்மையை மனம் பெற்றிருக்க வேண்டும். அதற்கு முட்டுக்கட்டையாக தன்(மா)னம் அமைவதை தவிர்ப்பதும் அவசியமே. இன்னொரு மனிதனின் மனதை முற்றிலும் தானே கட்டுப்படுத்துவது அடிமைத்தனமாகும். அடிமையினது, அடிமைப்படுத்துபவனது ஆன்மாக்களை நொந்து கொள்வதில் பயனில்லை.

நடைமுறையில் பார்க்கையில் ஆன்மாவாக கருதப்படும் உயிர்ச்சக்தியிலேயே ஆணவம் என்பதையும் உள்ளடக்கலாம். உயிர்நீத்த பின்னரே ஆணவம் முற்றாக நீங்குகிறது. மரணப்படுக்கையில் உடலை அசைக்க முடியாத நிலையிலுள்ளவன் தனது ஆணவத்தை வெளிப்படுத்துவதாக ஆகலாம் என்பது தெரிந்ததே. பிச்சைக்காரனும் 'நான்' என்ற கௌரவத்தை இழக்கத் தயாராவதில்லை.

மனதை வளப்படுத்துவதே என்னை (நான் என்பதை) வளப்படுத்துவதாகும். அமைதிக்கான வழியும் அதுவே. அதன் குறைவால் மற்றவருடன் கருத்து வேறுபடும்போது மனம் சிவக்க, பிளக்க (*Conflict*) நேரிடுகிறது. யுத்தம் சுற்றுசூழ்நிலையால் என்பதைவிட, பரிசுத்தம் பெற்ற மனநிலையால் அமைதியடைய வேண்டும். 'ஜெகமெங்கும் அமைதியை தா' என பரமாத்மாவை நாடலாம். மனதினது தேடல் என்பது ஜீவாத்மாவை சாருவதே.

எல்லோரும் இன்புற்றிருக்க பரமனை வேண்டுகிறோம். அவன் படைத்த பூலோகத்தில் பொருள் வளமாக அது பெறமுடியாதது. இருக்கிறதெல்லாம் யாவருக்கும் பொதுவானால் தான் பதுக்குகிறவனும், பறிக்கிறவனும் அற்றுவிடுவார்கள். அருள்வளமாக அதைப்பெற மனவளம் தேவை. இன, ஜாதி, மத பேதம் பேசுவதும் மனவளமின்மையால் மனம் என்பதாக தன்னைக் குறிப்பதே நிவர்த்திக்கு வழி. ஆன்மாவின் ஊழ்வினை என பழிபோட வேண்டியதில்லை.


தவறு செய்வது மனித இயல்பு, விதி என எண்ணுவதில் என்ன பயன்? மனவளமின்றி தவறின் காரணம். அதற்கான நிவாரணம் காண முடியாது. மன்னிப்போம், மறப்போம் என்று சொல்வது சுலபம். நினைக்கத் தெரிந்த மனம் மறக்கத் தெரியாமல் போவதும் மனவளம் இன்மையால். மனதின் மகிமையாக மன்னித்தல் அமைகிறது.

தனிமனிதன் மன்னிப்பதால் தன்னைத்தானே உயர்த்திக் கொள்கிறான். சமூகம் மன்னிக்கக் கூடியதானால் நாடு சுபீட்சமாகும். மனித இனம் மன்னிக்க முன்வந்தால்தான் மனிதகுலம் தழைக்க முடியும்.

ஏன் தான் நான் (ஆன்மா) அவதாரம் பெற்றேன் என எண்ணுவதைவிட, நான்தான் (ஆணவம்) என எண்ணுவதே மேல். அது எல்லை மீறுவது தொல்லை தருவதே!

நாம் அறிய வேண்டிய அதை விட அரிய ரகசியம் வேறு எது? ●

# அடிமைகள்



இலண்டனிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் ஒன்றாகப் படிக்கும் சுகந்தனும் அவனது நண்பன் இளங்கோவும் ஒன்றாக அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருக்கிறார்கள். இருவருமே பட்டதாரிகள். செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் பற்றி மேலும் ஆராய்ச்சி செய்வதற்காக இப்பொழுது புதிதாக பல்கலைக்கழகத்தில் சேர்ந்திருக்கிறார்கள். பேச்சு வாக்கில் சுகந்தன் கூறுகிறான்:

அமெரிக்க–இங்கிலாந்து போன்ற செல்வந்த நாடுகள் ஒருபோதும் தனித்து இயங்க முடியாது. ஏதோ ஒரு விதத்தில் அவை இந்தியா போன்ற வறிய நாடுகளில் தங்கியிருப்பதை தவிர்க்க முடியாது. உதாரணமாக– கம்ப்யூட்டர் புரோகிராம் என்று வந்து விட்டால்– இன்று அகில உலகும் இந்தியாவையே நம்பி இருக்கிறது– இப்படி எத்தனை எத்தனையோ விடயங்கள்– என்று மிகப் பெருமையாக கூறிய சுகந்தனின் கூற்றை மறுக்கிறான் இளங்கோ.

சுகந்தா! ஆழம் தெரியாமல்– மேலேழுந்தவாரியாக பேசுகிறாய் நீ. நமது நாடுகளுக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர்– தன்னுடைய நாட்டிலிருந்து நமது நாட்டிற்கு வந்து– நம்மை அடிமைகளைப் போல பாவித்து– மிகவும் சிரமமான– கீழ்த்தரமான– முட்டாள்த்தனமான வேலைகளை நம்மவர்களைக் கொண்டு செய்வித்து விட்டு– நம்முடைய முகத்தில் கூலிக் காசை வீசி எறிந்து விட்டு– நாம் செய்த வேலையின் பயனால் கிடைத்த செல்வம் எல்லாவற்றையும் தன்னுடைய நாட்டிற்கு கொண்டு சென்று– அதை ஒரு சொர்க்கபுரியாக மாற்றி– குபேர வாழ்க்கை வாழ்ந்தார்கள் மேலை நாட்டவர்கள் ஒரு காலத்தில்.

சந்தர்ப்ப சூழ்நிலைகள் மாறியதும்– மேலும் சுரண்ட முடியாத நிலை வந்ததும்– தங்களுடைய நாட்டிற்குத் திரும்பிச் சென்று விட்ட மேலைநாட்டவர்களிடம்– உங்களுக்கு அடிமைத் தொழில் செய்வதே எமது ஆன்ம ஆதங்கம் என்பது போல– நமது நாட்டை விட்டு இங்கே வந்து– மிகவும் சிரமமான– கீழ்த்தரமான– முட்டாள்த்தனமான வேலைகளை– அவர்களுக்காகச் செய்து கொண்டிருக்கிறோம்.

கம்ப்யூட்டர் புரோகிராமர் என்று பெருமையாகக் கூறுகிறாயே– அது எப்படியான தொழில் தெரியுமா? முட்டையில் மயிரைப் பிடுங்கி– பிடுங்கிய அந்த மயிரில் பேன் இருக்கிறதா– என்று பார்க்கும் ஒரு முட்டாள்த்தனமான தொழில் அது. இது மாத்திரமல்ல, நாம் பெரிய படிப்பு– அற்புதமான படிப்பு என நினைத்து– பல்கலைக்கழகங்களில்– தொழில்நுட்பக் கல்லூரிகளில் விழுந்தடித்து பயிலும் எந்தக் கல்வியையும்– மேலைநாட்டவர்கள் பெரிதாக விரும்புவதுமில்லை– படிக்க முயற்சிப்பதுவுமில்லை. மாறாக இப்படிப்பட்ட கல்வியை விழுந்தடித்துக் கற்ற நம்மை வைத்து எப்படிப் பணம் பண்ணுவது என்ற கல்வியை அவர்கள் கற்கிறார்கள்.

நாம் என்னடாவென்றால்– நான் அதில் நிபுணன்– இவன் இதில் நிபுணன் என்று கூறிக்கொண்டு– இரவு பகலாக அவனுக்கு வேலை செய்து கொண்டிருக்கிறோம்.

ஆளப்பிறந்த– அனுபவிக்கத் தெரிந்த வெள்ளையர்களுக்கு–அன்றும்–இன்றும்–என்றென்றும் நாம் ஏதோ ஒரு வகையில் அடிமைகளாகவே இருக்கிறோம்!

சில அடிமைகளின் விலங்குகள் கண்ணுக்குத் தெரிவதில்லை!

# கலைஞன்

இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்து– கடந்த ஒரு வருட காலமாக இலண்டனில் வசிக்கும் பிரபல இளம் வயலின் கலைஞன் சங்கரன்– தன்னிடம் வயலின் பழகும் சில மாணவ மாணவிகளின் திறமை பற்றியும்– அவர்களின் பெற்றோர்கள் கர்நாடக இசைக்குத் தங்கள் வாழ்வில் கொடுக்கும்– மதிப்பு– முக்கியத்துவம்– மரியாதை பற்றியும் மூத்த இசைக் கலைஞர் பிரபுவுக்கு மிக உற்சாகமாக கூறிக்கொண்டிருக்கிறான். பிரபுவோ கடந்த முப்பது ஆண்டுகளாக இலண்டனில் வாழ்ந்து– அசல் எது?– நகல் எது?– என்று கூறு போட்டு பார்த்து– படித்து– தெளிந்த– அறுபது வயது நிரம்பிய பழுத்த பழம். சங்கரனின் உற்சாகமான கூற்றுக்கு பிரபுவின் பதில்:

சங்கரா! வெளி வார்த்தைகளையும்– மேலெழுந்தவாரியான செய்கைகளையும் பார்த்து– இந்த வர்க்கத்தை தவறாக எடை போட வேண்டாம். கலை– கலைஞன்– இசை– நாட்டியம்– அது– இது– என்று இங்கு இவர்கள் பேசுவது எல்லாமே வெறும் பம்மாத்து. இவர்களுக்கு இசையும் தெரியாது– அதற்கு இசைவும் தெரியாது– அதை படைக்கும் கலைஞனையும் தெரியாது. எதற்காக ஒட்டுகிறோம் என்று சரியாக புரியாமல்– ஏதோ ஒரு காரணத்திற்காக நம்முடன் ஒட்டிக் கொண்டிருக்கும் புத்தி கெட்ட கூட்டம் இது.



இந்த கலா ரசிகர்கள்– அபிமானிகள்– கலாச்சாரத் தந்தைகள்– உன்னைப் போல ஒரு கலைஞனுக்கு தங்கள் மனதில் என்ன இடம் கொடுத்திருக்கிறார்கள் என நீ உண்மையிலேயே பார்க்க வேண்டுமானால்– அவர்களுள் ஒருவரின் மகளை நீ காதலிப்பதாக ஒரு முறை கூறிப் பார்! நடக்கக்கூடாத அசம்பாவிதம் ஒன்று நடந்து விட்டதைப்போல– ஏதோ ஒரு அபூர்வ பிராணி வீட்டிற்குள் நுழைந்து விட்டதைப் போல– குய்யோ–முறையோ– என்று கத்துவார்கள். சுற்றம்–சூழல் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு கலைஞனைக் காதலிப்பது எவ்வளவு தவறான செயல் என காதலிப்பவளுக்கு எடுத்துக் கூறுவார்கள்.

இது மட்டுமா? தங்கள் பிள்ளைகளுக்கு எத்தனையோ கலை அபிமானிகள் இசை கற்றுத் தருகிறார்கள். இசை பயிலும் அந்த பிள்ளைகளின் பாடசாலை சோதனைகள் நெருங்கியதும் அத்தனை அபிமானிகளும் ஒட்டு மொத்தமாக உன்னிடம் கூறுவதென்ன?

மாஸ்டர்! பிள்ளை சோதனைக்குப் படிக்க வேண்டும். அது முடிந்ததும் அவன் மீண்டும் வகுப்புகளுக்கு வருவான்.

சங்கரா! இது என்னடா நியாயம்? சோதனைக்குப் படிக்கும் காலத்தில் தான் ஒரு பிள்ளைக்கு முன் எப்போதையும் விட இசை வகுப்புகள் அதிகமாக தேவை என்பதைக் கூட அறியாத இந்த அபிமானிகளுக்கு எதற்கடா சங்கீதம்?

இது மாத்திரமல்ல– ஒரு பிள்ளையிடம் அபூர்வத் திறமை– அற்புத ஞானம் இருக்கிறது– இந்த வழியில் அவனது திறமைகளை விருத்தி செய்து அவனை ஒரு முழு நேர கலைஞனாக மாற்ற வேண்டும் என சம்பந்தப்பட்ட பெற்றோர்களிடம் ஒரு முறை கூறிப் பார்! குல கௌரவம்– சமுதாயம்– அந்தஸ்து– என்று என்னவெல்லாம் பிதற்றுகிறார்கள் பார்!

தனது வீட்டில் ஒரு கலைஞன் உருவாகுவதை– உறவாகுவதை விரும்பாதவன்– கலையைப் பற்றி பேசுவதெல்லாம் ஒரு வகை விபச்சாரம்.

# பிராணிகள்

ஐந்து வயது நிரம்பிய தனது ஒரே மகன் முரளியை முதன் முறையாக பிரமாண்ட அந்த மிருகக்காட்சிசாலைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார் பேராசிரியர் ரகுராமன். சிறுவனது உற்சாகம் கரைபுரண்டு பாய்கிறது. அங்கும் இங்கும் ஓடுகிறான்– அது என்ன மிருகம்?– இது என்ன பறவை?– என்று கேள்வி மேல் கேள்வியாக கேட்கிறான். புத்தகங்களில் படித்து அறிந்திருந்த ஒரு சில பொதுவான விலங்குகளைத் தவிர வேறெதுவுமே தெரியாத முரளிக்கு அங்கு பார்த்தவை எல்லாமே அதிசயம்– ஆச்சரியம். மகனின் கேள்விகளுக்கு பதில் கூறிக் கொண்டே– தானும் அந்த விலங்குகள் உலகத்தை– தனது பார்வையில் ரசிக்கிறார் பேராசிரியர்.

ஒவ்வொரு கூட்டிலும் ஒவ்வொரு வகையான பிராணி– ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம்– ஒன்று போல இன்னொன்றில்லை– கறுப்பாக இருக்கிறது ஒன்று– சிவப்பாக இருக்கிறது இன்னொன்று– வாலுடன் சில பிராணிகள்– வாலில்லாமல் பல பிராணிகள்– அழகாக சில விலங்குகள்– அசிங்கமாக பல விலங்குகள்–கம்பீரமாக ஒன்று– கவலையாக இன்னொன்று!



உருவம் மட்டுமா வித்தியாசம்? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணம்!

பலமிருந்தும்– பதுங்கி பாயும் விலங்குகள் ஒரு புறம். பதுங்காமல்– ஒளியாமல் நேரடியாகவே தாக்கும் விலங்குகள் மறுபுறம். பாடுபட்டு தேடிய இன்னொன்றின் இரையை திருடும் பிராணிகள் ஒருபுறம், பாடுபட்டுத் தேடிய இரையை இன்னொன்றிடம் இழக்கும் விலங்குகள் மறுபுறம். இன்னொன்று தேடியதை அடித்துப் பறிக்கும் இன்னொன்று. பெற்றோர்கள் குகையில் இல்லாதபோது அவற்றின் குட்டிகளை இரையாக்கும் ஒரு வகை.

பெற்றோர்கள் இருக்கும்போதே அவற்றை விரட்டி விட்டு அவற்றின் குட்டிகளை இரையாக்கும் இன்னொரு வகை.

தீண்டினால்– எடுத்த எடுப்பிலேயே மரணத்தை தழுவ வைக்கும் ஒரு கூட்டம். படிப்படியாக மரணத்தை தழுவ வைக்கும் இன்னொரு கூட்டம். அங்கிருக்கும் எல்லாவற்றைப்பற்றியும் முரளிக்கு விளக்கிய பின்– வீட்டிற்குப் போகும் போது ரகுராமன் மனத்திற்குள் நினைத்து– மகனுக்கு கூறாமல் விட்ட விடயம்:

மகனே! இன்று நீ பார்த்தவை எல்லாமே காட்டில் வாழும் பிராணிகள். இவற்றைப்பற்றி அறிந்து நீ வாழ்க்கையில் பெரிதாக சாதிக்கப்போவது ஒன்றுமில்லை. நீ தெரிந்து கொள்ள வேண்டியது நாட்டில் வாழும் பிராணிகளைப் பற்றியே. ஆனால், அவற்றை விளங்கிக் கொள்வதற்கு இப்பொழுது உனக்கு அறிவு போதாது.

காட்டில் வாழும் விலங்குகளுக்கு மட்டுமா தனி உருவம்?– தனி குணம்? நாட்டில் வாழும் பிராணிகள் கூட அதற்கு விதி விலக்கல்ல.

கூட இருந்து குழி பறிப்பவர்கள் ஒருபுறம்– தக்க தருணத்தில் காலை வாருபவர்கள் மறுபுறம். போக விட்டு புறம் சொல்பவர் சிலர்– உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்பவர் பலர். வீட்டில் இராமனாக சிலர்– வெளியில் கிருஷ்ணர்களாக பலர். எத்தனை சகுனிகள்– எத்தனை சூர்ப்பனகைகள். எத்தனை துரியோதனன்கள்– எத்தனை இரவாணர்கள்.

நாட்டில் வாழும் இந்த பிராணிகளுக்கு பெயர் மனிதர்கள்.

சரோஜினி சந்திரகோபல்











# சைவ முன்னேற்றச் சங்கம் 42வது ஆண்டு விழா ஒரு பார்வை



சைவ சமயக் கருத்துணர்வினூடாகச் சமூக சேவை செய்துவரும் சைவ முன்னேற்றச் சங்கம் UK-யின் 42-ஆவது ஆண்டு நிறைவு விழா, சங்கத் தலைவர் திரு. தர்ம இரவீந்திரமோகன் தலைமையில், 21.09.2019 அன்று Woodford Green, Woodbridge High School-இல், சம்பிரதாய பூர்வ நிகழ்வுகளுடன், 42 மங்கள விளக்குகள் ஏற்றப்பட்டு, மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

42 வருட முதிர்ச்சியும், அனுபவமும் கொண்டுள்ள இச்சங்கத்தின் நிழலில், பல சேய்கள், தலைநிமிர்ந்து நின்று, தாய் மண், வாழ் மண்ணில் மட்டுமின்றி, உலகின் பல பாகங்களிலும் உள்ள “தேவை வேண்டும் மக்களுக்குச் சேவை செய்து வருவது” சங்கத்தின் வளர்ச்சிக்கான பெரும் சான்றாகும்.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் முதலாவது வாரிசு, நால்வர் தமிழ்க் கலை நிலையம், இந்நிலையத்தின் நடன ஆசிரியை திருமதி. ரஜி மோகனராஜ், வீணை ஆசிரியை திருமதி. செந்தில் செல்வி, வாமனானந்தன், மிருதங்க ஆசிரியர் திரு. குமரன் ரவேந்திரதாஸ் ஆகியோரது மாணவ, மாணவிகள் தாம் கற்றவற்றை, தமது நுண்கலைத் திறனை, மிக நேர்த்தியாக அரங்கில் சமர்ப்பித்தனர். இதே நிலையத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் “ஆவணங்காட்டி ஆண்டவன்” நாடகத்தில், சரளமாக வெளிவந்த மாணவர்தம், கருத்துணர்ந்த பேச்சு, முறையான உச்சரிப்பு இவையாவுமே, குழந்தைகளது தாய்மொழி ஆளுமை, சமய அறிவினைப் பறைசாற்றி நின்றன. நால்வர் தமிழ்க்கலை நிலைய தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர் அனைவருக்கும் இப்பெருமையில் பங்குண்டு.

சங்கத்தின் இன்னுமோர் அங்கம், சமூகச் சேவை செயலாளர் திரு. வாமனானந்தன் பொறுப்பில் உள்ள “நால்வர் மூத்தோர் நிலையம்” திருமதி. புவனேஸ்வரி சபாரத்தினம் நெறியாள்கையில், மூத்தோர் வழங்கிய “அப்பம்மாவும் ஐPhone”-ம் நாடகம், சபையோரைச் சிரிக்க வைத்தது; சிந்திக்க வைத்தது. ஒரு செய்தியையும் சொல்லி நின்றது. “மூப்பு என்பது மனித வளர்ச்சியின் ஒரு பரிணாமம். அது முதிர்ச்சியே தவிர, முடக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. வாய்ப்புகள் கொடுக்கப்பட்டால் மட்டுமே வளர்ச்சியை நாம் காணமுடியும்.” கதாபாத்திரங்களுக்கு உயிர்கொடுத்த மூத்தோர் நடிப்பு சபையினரை கவர்ந்ததைக் கரவொலிகள் காண்பித்தன.

சங்கத்திற்குப் பெருமை சேர்க்கும் மற்றுமொரு அணியினர், “அன்னை சிவகாமி மாதரணி”, திருமதி. அன்னலக்ஷ்மி ஜெயபாபு நெறியாள்கையில் மேடையேறியது, இவர்களது “நாம் எங்கே போகிறோம்?” என்ற



தலைப்பிலான கவி அரங்கம், எம் இனத்துக்கே உரித்தான கலாச்சார பண்பாடுகளுடன் பிறந்தோம், வளர்ந்தோம். இன்று அந்நிய மண்ணில், மாறுபட்ட கலாச்சார சூழலில் பயணிக்கின்றோம். உருண்டோடும் காலச் சக்கரத்தில், நின்று யோசிக்க நேரமில்லை. நாம் எங்கோ போகிறோமெனத் தெரியாமல் போய்க் கொண்டிருப்பதை எமக்கு நினைவூட்டிய காத்திரமான கவி அரங்கம்.

சங்கத்தின் விசேட அழைப்பினை ஏற்று, சமூகமளித்திருந்த, East-ham ஸ்ரீ முருகன் கோவில் பிரதம குருக்கள் கயிலை சிவநாகநாதசிவம் குருக்கள், சிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர் ஆலய பிரதம குருக்கள் சிவ சோம ரமேஷ் குருக்கள், Edmonton, நாகபூஷணி அம்மன் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கமலநாதக் குருக்கள் Walthamstow, கற்பக விநாயகர் ஆலய பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ வசந்தன் குருக்கள் அனைவரும் சங்கத்தின் வளர்ச்சியினை வாழ்த்தி, எதிர்காலம் சிறக்க ஆசியுரைகள் வழங்கினர்.

விழாவின் பிரதம அதிதியாக The Mayor of Redbridge/Councillor Zulfidar Husain அவர்களது சிறப்பு விருந்தினர்களாக Councillor தவத்துரை ஜெயரஞ்சன் (Redbridge) அவர்களும், மற்றும் Newham Mayor சார்பில் Ann Easter (The Commissioner for Interfaith and Inter Religious Dialogue) அவர்களும் அடுத்து Newham சார்பில் Public Relations Officer Labour Activist Mr. David Gills ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். பிரதம, சிறப்பு விருந்தினர்கள் சங்கத்தின் வளர்ச்சி பற்றி புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

சைவ முன்னேற்றச் சங்கம், ஒவ்வொரு ஆண்டு விழாவின் போதும், எமது மொழி, சமயம், கலை கலாச்சாரம், சமூகத்தின் வளர்ச்சிக்காகத் தொடர்ச்சியாகப் பல வழிகளிலும் சேவை செய்துவரும் ஒருவரைத் தெரிவு செய்து, அவரது சேவை நலன்களைப் பாராட்டி, கௌரவிப்பது வழக்கம். இவ்வருடம் டாக்டர் ஜெயேன்திரன் நமசிவாயம் அவர்கள் சேவை நலன் பாராட்டுக்கு உரியவரெனத் தெரிவு செய்யப்பட்டார். டாக்டர் நமசிவாயம் அவரது துணைவியார் திருமதி. மஞ்சுளா நமசிவாயம் அவர்களுடன் வருகை தந்து சிறப்பித்தார். அவரது சேவைகளை வரிசைப்படி விபரித்து, சபையினருக்கு அறிமுகப்படுத்தி, பெருமைப்படுத்தியவர் சங்கக் காப்பாளர்களில் ஒருவரும், சட்ட ஆலோசகருமான திரு. குமாரசாமி சிதம்பரப்பிள்ளை அவர்கள். டாக்டர் நமசிவாயம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, பாராட்டுப் பத்திரம் மேடையில் வாசித்துக் கையளித்து, தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவித்தனர் சைவ முன்னேற்றச் சங்கத்தினர்.

தலைவர் திரு. தர்ம இரவீந்திர மோகன் தனது தலைமை உரையில், 42 வருட காலமாக நமது சமூகத்தினருக்குச் சங்கம் ஆற்றிவரும் சேவைகளை விளக்கி, இன்று புதிய ஆலயம் அமைய இறையருள் கிட்டியதையும் கும்பாபிஷேகம் மாசி 10-ஆம் திகதி நடைபெற்றதையும் பற்றி மிகப் பெருமையுடன் பேசினார். அதேவேளையில், புதிய ஆலய நிர்மாணத்தில், முன்னைய தலைவர் திரு. சதாசிவம் ஆனந்த தியாகர் மற்றும் அவரது ஆட்சிக்குழு அங்கத்தவர்களது கடின உழைப்பினையும் பாராட்டினார். அடுத்து யோகா நிலையத்தினரது வரையறையற்ற பரந்த சேவை, கலசம், தோரணம் இதழ்களின் செயற்பாடுகள், சங்கச் செயலாளர்கள் தத்தம் துறையினை முன்னேற்றுவதில் காட்டும் ஆர்வம், ஆலய சிவாசாரியார்கள், ஆலயத் திருப்பணியில் இணைந்து செயல்படும் அனைவருக்கும் பாராட்டி நன்றி கூறினார்.

காப்பாளர்களில் ஒருவரும் சங்க உதவிச் செயலாளருமான திரு. சூரிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் நன்றியுரை வழங்கினார். சங்கச் செயலாளர் மற்றும் மாணிக்கம் இந்துசேகரன் இருவரும் நிகழ்ச்சிகளைச் சிறப்பாகத் தொகுத்து வழங்கி, விழாவினை நிறைவு செய்தனர். ●





வவுனியூர் இரா.உதயணன்





# உறங்காத உண்மைகள்!

இனிமையான மாலைப்பொழுது, பகலவன் மெல்ல தூங்கச் செல்ல நேரம் பத்து மணிக்கு மேலாகிவிடும். ஆனால் விடியற்காலை ஐந்து மணிக்கே சாரளத்தினூடாக பளிச்சென்று எட்டிப் பார்ப்பான்.

தாரகை ‘கோலில்’ அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தாள். கோடைக் காலமாதலால் இன்னும் பகலவன் உறக்கத்துக்குப் போகவில்லை. தாரகையோ வேலை முடிந்து ஆறு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துவிடுவாள். ரமேஸ் வரத்தான் சற்றுப் பிந்தும். ஆனால் இன்று எட்டு மணியாகியும் இன்னமும் ரமேசையும் காணவில்லை; மகள் ஆராத்தியும் வீடு வந்து சேரவில்லை.

வேலை முடிந்து வந்து உடுப்பை மாற்றி அவசர அவசரமாக சமைத்துவிட்டு புருசனுக்கும் மகளுக்கும் மேசையில் இரவு உணவை எடுத்து வைத்துவிட்டு இருவரதும் வரவை எதிர்பார்த்து நின்ற தாரகைக்குக் கோபம் கோபமாக வந்தது. தாரகைக்குப் பசியும் ஒருபுறம் வாட்ட, எல்லோருடனும் சேர்ந்து சாப்பிடலாம் என்று நினைத்திருக்க இருவரும் இன்னமும் வராதது மேலும் கோபத்தைக் கூட்டியது.

செல்போனை எடுத்து ரமேசிடம் கேட்பம் என்று டைனிங் ரூமிற்குள் போக, மேசையின் மேல் ஒரு புத்தகம் இருந்தது. முகநூலால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும் பற்றிய புத்தகம்தான் அது. செல்போனை எடுத்து ரமேசை கூப்பிடுவதை நிறுத்திவிட்டு, அந்தப் புத்தகங்களின் பக்கங்களைப் புரட்டத் தொடங்கினாள் தாரகை.

வாசிக்க வாசிக்க அவளின் கவனம் புத்தகத்தில் திரும்பியது. முகநூலால் நன்மைகள் பல இருந்தாலும் தீமைகள் அதிகமாக இருப்பதாகவே உணர்ந்தாள் தாரகை.

ஒருவித பயம் அவளை ஆட்கொள்ளத் தொடங்கியது.

ஆராத்தி பிரத்தியோக பாடசாலையில் உயர்தர வகுப்பு படிக்கும் மாணவி. பாடசாலை முடித்து வீட்டுக்கு வந்துவிட்டு திரும்பவும் ரியூசனுக்குப் போய் ஏழரை, எட்டு மணியளவில்தான் அவள் வீடு திரும்புவது வழக்கம். சிலவேளைகளில் ரமேஸ் வேலை முடித்து வரும்போது, அவருடன் சேர்ந்து வருவாள்.

அவளை எப்படியாவது ஒரு டாக்டராக்கிவிட வேண்டும் என்பதுதான் தாரகையின் கனவு. ஆனால் ரமேஸ் எல்லாவற்றையும் சுலபமாக எடுத்துக்கொள்பவன்.

‘அவள் விரும்பிய படிப்பையே படிக்கட்டும். அப்பதான் அவள் செய்யும் வேலையிலும் ஓர் ஆர்வம் இருக்கும்.

‘எங்கட சனம் டாக்டர், என்ஜினியர், அக்கவுண்டன்ட், லோயர் போன்ற தொழில்கள்தான் உயர்ந்த மதிப்புக்குரிய தொழில்கள் எண்டு நினைச்சுக்கொண்டு குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டிக்கொண்டு இருக்கு.

‘இவற்றைவிட எத்தனையோ ஆர்வமும் உயர்ந்த சம்பளமும்கொண்ட புதுப்புது தொழில்கள் ஆராத்தி போன்ற இளைய சமுதாயத்தினருக்கு இருக்கு. இண்டைக்கு கூகுள் கம்பனியின் முக்கிய அதிகாரி ஒரு இந்தியத் தமிழின். அந்த சுந்தர்பிச்சையை உலகில் உள்ள எல்லாத் தமிழருக்கும் தெரியும். ஒரு டாக்டராகவோ, ஞ்ஜினியராகவோ வந்தால் குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் உள்ள சிலருக்குத்தான் தெரியும். எனவே அவள் விருப்பப்படியே அவள் விரும்பியதை படிக்கட்டும்.’

- ரமேஸ் சொன்னவற்றையெல்லாம் தாரகை நினைத்துப் பார்த்தாலா இருந்தும் முகநூல் பற்றிய கட்டுரைகள் அவளை சிந்திக்க வைத்தது.

இவள் ஆராத்தி இரவு பன்னிரெண்டு மணிவரைக்கும் அறையைச் சாத்திவிட்டு படிக்கிறன் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறாளே. உண்மையிலேயே இவள் படிக்கிறாளா அல்து வேற ஏதும் செய்யிறாளா என்ற ஒரு சந்தேகம் தாரகையின் மனதில் எழத் தொடங்கியது.

என்ர ஒரே பிள்ளை தப்புச்செய்யமாட்டாள் என்று நினைத்தவளாய் கைத்தொலைப்பேசியை எடுத்து ஆராத்திக்குப் போன் பண்ணினாள்.

“அப்பாவோட காரில வந்துகொண்டிருக்கிறன் அம்மா” என்று பதில் வந்தது.

ஏனோ தாரகையின் மனது நிலையற்று பலவற்றையும் நினைத்து தவித்துக் கொண்டிருந்தது.

கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு யன்னலினூடாக எட்டிப் பார்த்தாள். ரமேஸ் காரை விட்டிறங்க ஆராத்தியும் தோற்பையை முதுகில் சுமந்தவண்ணம் காரை விட்டு இறங்கினாள்.

இன்னமும் பகலவன் வெளிச்சத்தை பரப்பியிருந்தான். தாரகை ஓடிச்சென்று முன் கதவைத் திறந்தாள்.

“என்ன இண்டைக்கு வழமையைவிட பிந்தி வாறியள்.”

“இந்த நாட்டுக்கு வந்து இருபது வருசங்களாச்சு. என்ன செய்யிறது. கஷ்டப்பட்டு வேலை செய்துதானே ஆக வேணும். இன்னும் கொஞ்சம் நேரம் வேலை செய்ய முடியுமா, அவசர வேலை இருக்கு எண்டு என்ற உயர்அதிகாரி கேட்டால் இல்ல எண்டு சொல்லிப்போட்டு வரமுடியுமா?”

ஆராத்தி தகப்பனை முந்திக்கொண்டு உள்ளே நடந்தாள்.

தாரகையும், ரமேஸ் கூட்டி வந்துவிட்டார்தானே என்று ஒரு கேள்வியும் கேட்கேல்ல.

“அம்மா பசிக்குது” என்று ஆராத்தி சொல்ல,

“போய் கெதியில குளிச்சுப்போட்டு வாங்கோ” என்று கட்டளையிட்டாள் தாரகை.

இருவரும் தங்கள் தங்கள் அறைக்குச் சென்று குளித்து ஆடைகளை மாற்றிவிட்டு கீழே வந்தார்கள்.

மூவருமாக மேசையில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

“இப்பவெல்லாம் இந்த முகநூல், வாட்ஸ்அப் பாவிக்கிற சனங்கள் கூடிப்போச்சு. அதில செலவழிக்கிற நேரத்தை வேற ஏதாவது நல்ல விசயங்களுக்குச் செலவழிக்கலாம்.”

தாரகை சொன்னதை இருவரும் காதில் போட்டதாகத் தெரியவில்லை.

ரமேசும் ஆராத்தியும் சாப்பிடுவதில் கவனம் செலுத்துவது போல பாசாங்கு செய்தார்கள்.

“நீங்கள் நான் சொன்னதைப் பற்றி என்ன நினைக்கிறியள் அப்பா” தாரகை ரமேசைப் பார்த்துக் கேட்டாள்.

“எதைப்பற்றி கேட்கிறாய்?” ரமேசின் கேள்வி தாரகைக்குக் கோபத்தை உண்டு பண்ண, “ஒன்றுமில்ல” என்று குனிந்து கொண்டாள்.

நேரம் இரவு பத்தைத் தாண்டியிருந்தது. எல்லோரும் படுக்கைக்குச் சென்றார்கள்.

தாரகை தனது அறையில் அமர்ந்திருந்து சீரியல் பார்க்கத் தொடங்கினாள். அவள் வழமையாகப் பதினொரு மணிக்குப் பிறகுதான் படுப்பாள்.

ரமேஸ் இன்னும் கொஞ்சம் வேலை இருக்கு, முடிச்சுப்போட்டு படுக்க வாறன் என்று சொல்லிவிட்டு வேலை அறைக்குச் சென்றான்.

ஒவ்வொரு நாளும் இரவு வீட்டுக்கு வந்த பின்பும் ஒரு மணி நேரமாவது அலுவலக வேலையை கம்ப்யூட்டரில் செய்வது வழமைதானே என்று மனதிற்குள் நினைத்த தாரகை “வேலையை முடிச்சிட்டு கெதியில வாங்கோ” என்று சொன்னாள்.

தாரகையின் கவனம், T.V.யின் பக்கம் திரும்பியது.

அறைக்குள் சென்ற ரமேஸ் கம்ப்யூட்டரை ஆன் பண்ணினான். பின்பு முகநூல் பக்கம் போனான். அங்கே ஒவ்வொன்றாகப் பார்த்துவிட்டு வழமையாகப் பேசும் (chat) பெண்ணுடன் முகநூலில் பேசத் தொடங்கினான். ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு மேலாக இருவரும் பேசி வந்தார்கள். எத்தனையோ அந்தரங்கப் பேச்சுக்கள். ஒருவரையொருவர் விரும்புகின்ற அளவுக்குப் பேசிவிட்டார்கள். இன்றுதான் முதன்மையாகப் பேசும் கமராவில் ஒருவரை ஒருவர் பார்க்கப் போகிறார்கள். முகநூல் பக்கத்தில் இருவரும் தங்கள் படங்களைப் போட்டு வைக்கவில்லை. அத்தோடு பிரத்தியேக படங்களும் முகநூலில் இருக்கவில்லை.

ஆராத்திக்கு ஒரு பக்கம் தன்னோடு வழமையாக எல்லாம் பேசும் அந்த இளைஞனைப் பார்க்க மிகவும் ஆவலாக இருந்தது. மறுபக்கம் டென்சனாகவும் இருந்தது. எழும்பிச் சென்று கதவு பூட்டப்பட்டு இருக்கிறதா என்று ஒருமுறை பார்த்துக் கொண்டாள்.

முகநூலைத் திறந்து பேசும் பக்கம் போய் அந்த இளைஞனின் பெயரை கிளிக் பண்ணினாள். அந்த இளைஞனின் பேசும் பக்கத்தில் கமராவினூடாக அந்த இளைஞன் தோன்றினான்.

அவனைப் பார்த்ததும் சில கணங்கள் அவளது கண்களை அவளாலேயே நம்பமுடியவில்லை. இவ்வளவு நாட்களும் இவருடனா பேசினனான். அதிர்ந்து போனவள், “அப்பா நீங்களா?” என்று கத்தினாள். கதறி அழுதாள். கம்பியூட்டரை ‘ஆப்’ பண்ணினாள்.

தகப்பனின் வேலையறைக்குள் ஓடினாள். ரமேசும் திகைப்புடன் கம்ப்யூட்டரை ‘ஆப்’ பண்ணாமல் அப்படியே அமர்ந்திருந்தான்.

“அப்பா நீங்களா இப்படி? எத்தனை நாட்களாக என்னைப் போன்ற இளம் பெண்பிள்ளைகளோட... உண்மையைச் சொல்லுருங்கோ அப்பா...” ஆராத்தி கதறினாள்.

“சத்தியமாக உன்னோடதான் இப்படி பேசினனான். வேற யாரோடையும் இல்ல.” ஒரு கோழையாய் தகப்பன் என்ற ஸ்தானத்திற்குப் பொருத்தமற்றவனாக அமர்ந்திருந்தான் ரமேஸ்.

“உங்களைப் போல எத்தனை வயது போனவர்கள் இளம் பெண்பிள்ளைகளை ஏமாற்றினமோ தெரியாது” - சொல்லிக்கொண்டே தனது அறையை நோக்கி ஓடினாள் ஆராத்தி.

இனி எப்படி ஒரு தகப்பனாக சொந்த மகளின் முகத்தில் முழிப்பது என்று நினைக்கும் போது பைத்தியமே பிடித்துவிடும் போல் இருந்தது ரமேசுக்கு.

தாரகை மிகவும் சுவாரசியமான சீரியல் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் இங்கே முகநூலால் அதுவும் பொய்ப்பெயரில் ஏமாற்றப்பட்ட ஒருத்தியாய் கட்டிலில் அமர்ந்து அழுதுகொண்டிருந்தாள் ஆராத்தி.

முகநூலிலும் நிறையவே ஏமாற்றங்களும் நடந்துகொண்டுதான் இருக்கின்றது.

வேலையறை மின்சார சுவிட்சை ஆப் பண்ணிவிட்டு மௌனமாக அழுதபடியே தாரகையின் அறையை நோக்கி நடந்தான் ரமேஸ். நாளை என்ன நடக்குமோ என்று நினைக்க அவனுக்கு தலையே சுற்றியது. தொப்பென்று கட்டிலில் வீழ்ந்தான். விடியலே வராவிட்டால் எவ்வளவு நல்லது என்று நினைத்தவன் மௌனமாகவே இரவு முழுவதும் தனக்குள்ளே அழுதவண்ணம் கண்விழித்திருந்தான். ●



ஏ.ஜே.ஞானேந்திரன்



# கிழிசல் நாகரீகம்



பொதுவாகவே ஐரோப்பிய நாடுகளில், கோடை என்று வந்து விட்டால், ஆணோ பெண்ணோ ஷோர்ட்ஸ் எனும் கட்டைக் காற்சட்டைகளை வெவ்வேறு வடிவங்களில் அணிவதுண்டு. கிழிசல்களோடு காற்சட்டைகள் அணியும் பணக்கார பிச்சைக்காரர்கள் தொடக்கம், அரையில் நிற்காமல் நழுவிக் கொண்டிருக்கும் தொளவென்ற பெரிய காற்சட்டைகள் வரை நாகரீக உலகில் நடமாடுகின்றன. இவைதான் வெயில் கால உடைகளாக இருந்தாலும், பல கோடை ஆடைகள் அணிபவர்களுக்கு பைத்தியக்காரர்கள் போன்ற தோற்றம் அளிப்பதுமுண்டு. உதாரணத்திற்கு, ஒன்றுக்கு மேல் ஒன்றாக மூன்று ஜோடி ஜீன்ஸ்களை அணிந்தவர்களைக் கண்டிருக்கிறீர்களா? இன்னும் சில இளம் பெண்கள். அணியும் காற்சட்டையின் இடுப்பிற்கு கீழ் பகுதியில், காற்றோட்டத்திற்காக ஒரு துவாரமும் வைத்திருக்கிறார்கள்.நல்லதொரு டிரவுசரை வாங்கி, அதைப் பல இடங்களில் கத்தரித்து விட்டு, தெரியக் கூடாததையெல்லாம் வெளியார் பார்வைக்கு வைக்கும், சிங்காரிகளும் இருக்கிறார்கள்.. நல்ல கிழிசல் நாகரீகந்தான்!

# மரங்களாகும் நகங்கள்



தன் கைகளை வெட்டிவிடும்படி மருத்துவர்களை இரந்து வேண்டிக் கொண்டிருக்கிறார் ஒருவர். பங்களாதேஷ் நாட்டவரான இவரது நகங்களின் அபரித வளர்ச்சிதான் இவரது தலையிடி! பங்களாதேஷ் நாட்டில் இவரை மர மனிதன் என்று அழைக்கிறார்கள். 28 வயதான இவரால் இரவில் நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை.. இவரது நகங்களின் ஓயாத வளர்ச்சி தொல்லையால் வரும் வேதனையை தாங்க முடியாமல் தவிக்கிறார் இவர். இந்த வெளி வளர்ச்சியை அகற்ற இது வரையில் 25 தடவைகள் இவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவருக்குமே வரக்கூடாத ஒரு விசித்திர நோய் இவரைப் பிடித்தாட்டுகின்றது. கடந்த வருடம், மருத்துவர்கள் கடந்த வருடம் இந்த வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி விட்டதாகக் கூறியிருந்தாலும், இப்பொழுது மீண்டும் முன்னரை விட வேகமாக நகம் வளரத் தொடங்கி இருக்கின்றது. இதே மருத்துவமனையில் ஒரு பத்து வயதுச் சிறுமிக்கும் இதே பிரச்சினைக்காக சத்திரசிகிச்சைகள் பல மேற்கொண்டும் பலன் பூஜ்யமாகவே இருந்துள்ளது.மானிடராய்ப் பிறப்பது அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு...... இல்லாமல் பிறப்பது அரிதிலும் அரிது...



# வேகவைக்கும் வெப்பம்

யாழ்ப்பாணத்தில் உக்கிர வெயில் குடிதண்ணீர் பஞ்சம் என்றெல்லாம் நாம் திட்டிக் கொண்டிருக்க, ஐரோப்பாவும் கொதிக்க ஆரம்பித்துள்ளது. பிரான்ஸில் 50 வரையிலான பாடசாலைகளை இழுத்து மூடுமளவிற்கு, வெப்பநிலை நாற்பது செல்சியஸைத் தாண்டுகிறது. பணக்கார நாட்டுப் பாடசாலைகள்தானே என்று நினைக்கிறீர்களா? ஆனால் இந்தப் பாடசாலைகளில் குளிரூட்டல் வசதி குறைவாம். (அக்கரைப் பச்சைகள் இப்படியும் இருக்கின்றன) சுவிட்ஸிலாந்து, இத்தாலி, ஜேர்மனி, செக் குடியரசு , போலந்து என்று மேற்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சூட்டில் தகிக்கின்றன.ஜேர்மனியில் வெப்பநிலை ஜூன் மாதம் 38.5ஐ தாண்டியதில்லை. இந்த வருடம் புதிய சாதனை படைக்கப்படலாம் என்கிறார்கள். சஹாரா பாலைவனத்திலிருந்து வழக்கத்தை விடக் கடுமையாக வெப்பக் காற்று வீசுவதால் ஐரோப்பாவின் வெப்பநிலை இவ்வாறு அதிகரித்திருப்பதாக கூறப்படுகிறது.ஒரே ஒரு சம்பவத்தை வைத்து புவி வெப்பமயமாதல்தான் காரணமென கூற முடியாது என்றாலும், இயற்கையாகவே அனல்காற்று வீசலாம் என்றாலும், தொடர்ச்சியாக வெப்பம் அதிகரிப்பது, அனல்காற்று வீசுவது இதற்கெல்லாம் பருவநிலை மாற்றம்தான் காரணம். 2003 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் அதிகரித்த வெப்பத்தின் காரணமான 14,000 மக்கள் உயிரிழந்துள்ளார்கள்.

# நூற்றாண்டின் பெரியவர்...



இந்த நூற்றாண்டின் பெரியவருக்காக பரிவாரங்களுடன் காத்திருக்கின்றது ரோக்கியோ நகரம். யார் அந்தப் "பெரியவர்"? அந்தப் பெரியவர் வேறு யாருமல்ல ஒரு பூகம்பந்தான். இறுதியாக 1923இல் பெரிய அளவில் கலவரப்படுத்தி , தாக்கி அழித்த பூகம்பம் மீண்டும் 100 வருடங்கள் கழித்து வரும் என்று திடமாக நம்புகிறார்கள் இவர்கள். உலகிலேயே அதிக ஜனத்தொகை கொண்ட நகராக(37மில்லியன்) இருக்கும் ரோக்கியோவை, 2050க்குள் 7 றிக்டர் அளவைக்கு குறையாத பாரிய பூகம்பம் தாக்கும் என்று நம்பும் இவர்கள், அதிலிருந்து மீள, இப்பொழுது தொட்டே முன்னேற்பாடாக பலவற்றை செய்யத் தொடங்கி உள்ளார்கள். எதிர்பார்க்கும் அளவில் ரோக்கியோ தாக்கப்பட்டால் 9700 பேர் பலியாகுவதுடன் 150,000 பேர் காயப்படுவார்கள் என்பது இவர்களது கணிப்பு! 30,000 கட்டடங்கள் வரையில் சேதமாகலாம், 3.39மி.தொகையினர் வீடுவாசல் இழந்தவர்களாகலாம் என்பது மேலதிக கணிப்பு. 1945இல் அமெரிக்க குண்டு 100,000 பேரைக் கொன்று, 267,000 கட்டடங்களை எரித்த நிகழ்வின் பின்னர், ரோக்கியோவில் நடக்கவிருக்கும் மிக மோசமான நிகழ்வு இது என்பது, இவர்கள் கணிப்பு. ஆனால் 1923இற்கு பின்னர் ரோக்கியோ நன்றாகவே மாறிவிட்டது. நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய இங்குள்ள வானளாவிய கட்டடங்கள், நாணல்போல ஆடக்கூடியவை. பூங்காக்களில் அவசர கழிவறைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. உலகிலேயே மிகப் பெரிய அளவிலான தீயணைப் படையோடு தயாராக இருக்கிறார்கள். இப்பொழுது மில்லியன் கணக்காக உல்லாசப் பயணிகள் தொகை அதிகரித்துள்ளது. 2020இல் ஒலிம்பிக் போட்டிகள். எனவே முன்னேற்பாடாக எதிர்த்து போராட, பலவழிகளிலும் தம்மைத் தயாராக்கிக் கொள்கிறார்கள் இவர்கள்.

# இனி றோபோக்கள் இராஜ்ஜியந்தான்



2030 அளவில் உற்பத்தி சம்பந்தமான உலகளாவிய 20 மில்லியன் வேலைவாய்ப்புகள், றோபோக்கள் கைவசம் போகப் போகின்றன என்ற ஒரு அதிச்சியான செய்தியை வெளியிட்டுள்ளார்கள். தொழிற் பயிற்சி குறைந்த வேலை வாய்ப்புகள் மெல்ல மெல்ல றோபோக்களிடம் கையளிக்கப்பட்டு வருவதால், சமுதாயத்தில் மனஅழுத்தமும், பொருளாதார அழுத்தமும் ஒருங்கே தலைதூக்கி இருக்கின்றன. ஏற்கனவே தொழிற்சாலைகளில் உற்பத்திப் பணிகளை ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட வேலைவாய்ப்புகளை பறித்துக் கொண்டுள்ளன. இப்பொழுது கணனி அறிவின் விருத்தி, ஒருவர் பேசுவதை இயந்திரங்கள் கிரகிக்கும் திறனில் முன்னேற்றம் போன்றன றோபோக்களின் வேலை வாய்ப்புகளை பெருமளவு அதிகரிக்க வைத்திருக்கின்றன. இதன் விளைவாக உற்பத்தி அதிகரிப்பும், பொருளாதார வளர்ச்சியும் நாட்டில் ஏற்படுவதாக சொல்லப்படுகின்றது. அதேசமயம் பறிபோகும் வேலை வாய்ப்புகளின் அளவு புதிய வேலை வாய்ப்புகளும் உருவாகுவதாக அவதானிகள் கருதுகிறார்கள். 2030 அளவில் இந்த றோபோ பொருளாதாரம், சுமாராக 5 trillion தொகை டொலர்களை ஈட்டித் தரும் என்பது வல்லுனர்களின் இன்னொரு கணிப்பு.




# இலண்டனில் 2ஆம் சங்கிலிமன்னன் வரலாற்றுக் குறும்பட வெளியீட்டு விழா

"யாழ்ப்பாணத்தில் கடைசித் தமிழ் மன்னன் இரண்டாம் சங்கிலி மன்னன் மறைந்து நானூறு ஆண்டுகளின் பின் அம்மண்ணின் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் 'மண்டியிடா வீரம்' என்ற குறும்படத்தை நடித்து நெறிப்படுத்தி உருவக்கிய சட்டத்தரணி சுப்பிரமணியம் சிறிகாந்தலிங்கம் அவர்கள் கௌரவத்திற்குரியவர் ஆகிறார். ஏலவே பண்டாரவன்னியன் வரலாற்றைத் திரைவடிவில் தந்த சிறிகாந்தலிங்கம் அவர்கள் இதுவரை அதிகம் பேசப்படாத இரண்டாம் சங்கிலி மன்னனின் வரலாற்றை நமக்கும் அடுத்த தலைமுறைக்கும் கையளிக்கும் முக்கிய சமூகப் பணியைச் செய்திருக்கின்றார்.

2-ஆம் சங்கிலி மன்னன் போர்த்துக்கேய தளபதி ஒலிவியேராவிடம் தோல்வியுற்று தமிழ் மக்களின் இறைமையை போர்த்துக்கேயரிடம் வழங்க நேர்ந்த சரித்திர நிகழ்வை சங்கிலி மன்னனின் வரலாறு சுட்டிக்காட்டுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் உட்பட நால்வர் மீது ட்ரயல் எட் பார் விசாரணையில் வாதங்களை முன்வைத்த சட்டமேதை எம். திருச்செல்வம் அவர்கள் சங்கிலி மன்னன் இழந்த தமிழ் மக்களின் இறைமையானது தமிழ் மக்களிடம் மீண்டும் கையளிக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை முன்வைத்தார்.

தமிழ் மக்களின் இறைமை பற்றிய வரலாற்றில் இரண்டாம் சங்கிலிய மன்னன் நிர்ணயமான பாத்திரத்தை வகிக்கிறார்" என்று யாழ் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளரும், விமர்சகருமான மு. நித்தியானந்தன் சமீபத்தில் இலண்டனில் நடந்த நிகழ்வில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய விமர்சகர் மு. நித்தியானந்தன், இரண்டாம் சங்கிலிய மன்னன் போர்த்துக்கேய படைவலிமைக்கு எதிராக நின்று பிடிக்க முடியாமல் இந்தியாவிற்குப் படகு வழியாகத் தப்பிச் செல்லும் வழியில் போர்த்துக்கேயரால் கைது செய்யப்பட்டு, சங்கிலி மன்னனை கோகாவிற்குக் கொண்டு சென்று ராஜதுரோகம் செய்யப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு, தூக்கிலிடப்பட்டார். டோன் பிலிப் என்ற பெயரில் அவர் கத்தோலிக்கராக மதம் மாற்றப்பட்டு அவர் விசுவாசம் மிக்க கிறிஸ்தவராக மாறினார் என்று போர்த்துக்கேய ஆதாரங்கள் கூறுகின்றன. பேராசிரியர் கணபதிப்பிள்ளை, வரதர், சொக்கன், செங்கை ஆழியான், காரை சுந்தரம்பிள்ளை ஆகியோர் முதலாம் சங்கிலி மன்னனைப் பற்றி நிறையவே ஆக்கங்களைப் படைத்துள்ள போதிலும், இரண்டாம் சங்கிலி மன்னனின் எந்த ஆக்கமும் வெளிவராத நிலையில் சிறிகாந்தலிங்கம் அவர்களின் 'மண்டியிடாத வீரம்' என்ற ஆவணம் முக்கியத்துவம் பெறுகிறது என்று தனது உரையில் கூறினார்.

இணுவையூர் அப்பாக்குட்டி நிலையம் தயாரித்து வழங்கிய 'மண்டியிடா வீரம்' என்ற வரலாற்றுக் குறும்படத்தின் வெளியீட்டு விழா இலண்டனில் நடைபெற்ற போது அந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய அறிஞர் செ. சிறிகந்தராசா உரையாற்றும்போது, "பல ஆயிரம் பவுண்களுக்குமேல் செலவிட்டுத் தன் அயராத உழைப்பில் சிறிகாந்தலிங்கம் தயாரிப்பில் 'மண்டியிடா வீரம்' யாழ்ப்பாணக் கடைசி மன்னனின் போர்த்துக்கேயருக்கு எதிரான போராட்டத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழ்ப்பற்றும், சமூக நலனும் கொண்டு செயற்படும் சிறிகாந்தலிங்கம் அவர்களின் இந்த ஆவணக் குறும்படம் பாராட்டுதற்குரியதாகும்" என்றார்.

சட்டத்தரணி எஸ். பரமலிங்கம் அவர்கள் உரையாற்றும்போது, "டி.ஏ.கோ. காசியாத் தீவை பிரிட்டிஷ் அரசு மீளவும் மொறிசியஸ் நாட்டின் வசம் மீளக் கையளிக்க வேண்டும் என்று ஐ.நா. சபா வழங்கியுள்ள ஆலோசனையானது சங்கிலி மன்னன் இழந்த தமிழ் ராஜ்யத்தை மீளவும் தமிழ் மக்களிடம் என்ற சட்ட வாதத்திற்கு வலுச்சேர்க்கிறது" என்று கூறினார்.

கவிஞர் பா.வை. ஜெயபாலன், என். கெங்காதரன், புலவர் சிவநாதன், கவி வீரவாகு, எஸ். ஸ்ரீரங்கன், டாக்டர் எஸ். நவரட்ணம், சட்டத்தரணி ரட்னசிங்கம், சமூகத் தொண்டர் எஸ். யோகநாதன் ஆகியோரும் பாராட்டிப் பேசியிருந்தனர்.

இலண்டன் திரிசக்தி இலக்கிய சங்கமத்தின் ஏற்பாட்டில் சிவ தணிகாசலம் அவர்கள் நாடக நெறியாளர் சிறிகாந்தலிங்கம் அவர்களுக்கு அளித்த விருதினை வைத்தியக் கலாநிதி மாலா ராதாகிருஷ்ணன் கையளித்தார்.

சட்டத்தரணி சிறிகாந்தலிங்கம் தனது ஏற்புரையில், "நமது வரலாற்றை நமது எதிரிகள் எழுதி வைப்பதற்கு இடம்தரக்கூடாது என்றும், யாழ்ப்பாணத்தின் இந்துக்கோயில்களை இடித்துத் தகர்த்த செயற்பாடுகளைப் போர்த்துக்கேயர்கள் தங்கள் ஆவணங்களில் பதிவு செய்திருக்கமாட்டார்கள் என்றும் படத்தில் தமிழ்ப் பாத்திரங்களோடு ஆங்கிலேய கதாபாத்திரங்களும் இணைந்து நடித்து திரைப்பட ஆக்கத்திற்கு மெருகூட்டியுள்ளனர்" என்று தெரிவித்தார்.

மக்கள் நிறைந்த வெளியீட்டு நிகழ்ச்சியாக இவ்விழா நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. ●

# எதற்காகவும் தாயை இழக்கக் கூடாது!



விக்கல் எடுத்ததும் மகன்தான் நினைக்கிறான் என எண்ணி மகிழ்கிறாள் முதியோர் இல்லத்தில் இருக்கும் தாய்..

உலகில் உன் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படாத ஒரே ஜீவன் அம்மா.

ஒரு தாய்க்காக எதையும் இழக்கலாம்.. ஆனால், எதற்காகவும் தாயை இழக்கக்கூடாது..

படிப்ப விட அப்பா அம்மா ஒசத்திதான். அதனாலதான் இன்சியல முதல்லயும், படிப்ப கடைசியிலும் எழுதுறோம்..!!

'ஹலோ' சொன்னதும் "என்னடா உடம்பு சரியில்லையா" என்று கேட்கும் அம்மாவிடம் தோற்றுப் போகின்றனர் உலகில் உள்ள அனைத்து மருத்துவர்களும்..!!

தாய் தந்தையாரின் அருமை நீ வளரும் போது தெரியாது.. உன் பிள்ளையை நீ வளர்க்கும் போது தான் தெரியும்...

*புரண்டு படுத்தால் நாம் இறந்துவிடுவோமோ என்று கருவில் இருந்த நமக்காக தூக்கத்தை கூட துளைத்து விட்டு இரவில் விழித்திருந்த சூரியன்.. "அம்மா"*

வார்த்தைகள் இல்லாமல் பேசினேன்.. கண்கள் இல்லாமல் ரசித்தேன்.. காற்றே இல்லாமல் சுவாசித்தேன்.. கவலைகள் இல்லாமல் வாழ்ந்தேன்.. என் தாயின் கருவறையில் மட்டும்..!!

*அம்மாவை சந்தோசப்படுத்த பணம், நகை வேணுமான்னு கேக்க தேவையில்லை.. சாப்பிடும் போது இன்னும் கொஞ்சம் சோறு போடும்மா என்று கேட்டாலே போதும்..*

ஒரு தாய் தனக்கு என்னவெல்லாம் செய்தாள் என்பதை மனிதன் கடைசிவரை உணர்வதில்லை.. அவன் அதை உணரும் போது அவள் உயிரோடு இருப்பதில்லை...

– தமிழன்

ஐ.ரி.சம்பந்தன்

# சித்தாவின் பணிவான பணி நீடுழி வாழ்க!

“சித்தா” என்று அன்பாக அழைக்கப்படும், சட்டத்தரணி சிதம்பரப்பிள்ளை அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் பல்துறை சமூகசேவையாளராக இலண்டன் தமிழ்ச் சமூகத்தால் பாராட்டப்படுபவர். தனது சட்டத் துறையில் ஓய்வுபெற்ற நிலையில், தனது நேரம் முழுவதையும் சமூகப் பணிகளுக்கு அர்ப்பணித்து வருகின்றார்.

சட்டத்துறையால் ஓய்வுபெற்ற பின்னர், தமிழர் சமூகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். பொதுச்சேவையில் சிதம்பரப்பிள்ளை, திருமதி. டாக்டர் மகேஸ்வரி இருவரும் இணைந்து ஈடுபடுவது மேலும் பாராட்டத்தக்கது. இவர்கள் இருவருக்குமுரிய வசதி, வாய்ப்புடன் உலகம் சுத்தி மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்த முடியும். எல்லாச் சுகபோகங்களையும் அர்ப்பணித்து மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என வாழ்ந்து வரும் குடும்பத்தை வாழும்போது பாராட்டுவோம்.



40 ஆண்டுகளாக சைவ முன்னேற்றச் சங்கத்துடன் இணைந்து உழைத்து வருபவர். இருவரும் சங்கப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். பல நிகழ்வுகளைப் பொறுப்பேற்று சிறப்புடன் நடத்தி வருகின்றனர். இவருடைய விழா என்றால் அடியார் கூட்டம் அணிதிரள்கிறது. சமயப் பற்றோடு தெய்வீக வழிபாட்டையும் கடைப்பிடித்து வருபவர்கள்.

டாக்டர் திருமதி. மகேஸ்வரி இலண்டன் ஆலய முருக வழிபாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவர். ஆலயத்தின் நிகழ்ச்சிகளில் தவறாது அமைதியாக பங்குகொள்பவர்.

சட்டத்தரணி சிதம்பரப்பிள்ளை இலண்டனில் இன்றுவரையும் ஈடுபட்ட தமிழ்ச் சமூக அமைப்புகள பல.

சித்தாவின் முகத்தில் எப்பொழுதும் புன் சிரிப்பு. கோபம் கிடையாது. அமைதி, அடக்கம், பொறுமை, சிந்தித்துக் கதைத்தல் ஆகிய அரும்பெருங் குணங்கள் அவரது தனித்துவம்.

பிரித்தானியாவில் அவரது பெரிய பணி மரணச்சடங்குகளைப் பொறுப்புடன் வழிநடத்துவது.

இதுவரையும் 300க்கு அதிகமான மரணச்சடங்குகளை மிகச் சிறந்த முறையில் வழிநடத்தியுள்ளார்.

உற்றார், உறவினர், நண்பர் என்ற வேறுபாடு இன்றி மரணச் சடங்குகளையும் ஒரே கண்ணோட்டத்தில் சமயாசார முறைப்படி நடத்துபவர். ஒரு ஆத்மா மரணித்துவிட்டால் உயிர் இழந்த உடம்பு, ஒரு தெய்வத்துக்குச் சமமானது.

கிரிகைகள் தொடக்கம் மயான அடக்கம் வரை மிக ஒழுங்காக மரணச்சடங்குகளை நடத்திவரும் பணி போற்றத்தக்கது.

“இத்தம்பதியினர் தமது வீடு, குடும்பம் என வாழாது சமூகம், ஆன்மிகம் எனப் பல பொதுப் பணிகளிலும் தங்கள் வாழ்வை ஈடுபடுத்தியுள்ளனர்” என்று நல்லூர் ஆதினம் மனம் திறந்து சித்தா தம்பதியை பாராட்டியுள்ளார்.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான முதல்வர் தங்கம்மா அப்பாக்குட்டி அன்று வாழ்த்தியவை : “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது” என்ற குறட்பாவுக்கு ஏற்றபடி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இலண்டன் முருகன் பிரதான குருநாகநாதசிவம் சிவாச்சாரியார் கூறியவை :

“மனதாலும், வாக்காலும், சிந்தையாலும் செயல்களினாலும் ஒன்றுபட்ட குணமுடைய சீர்மிகு தம்பதிகளாம் திரு. சிதம்பரப்பிள்ளை ஐயா திருமதி. மகேஸ்வரி அம்மாள்” என்கிறார்.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் அன்றைய மதிப்பீடு :

“இவர்கள் தம்பதியானது இறைவன் இட்ட பூட்டு. இருவரும் மானிடத்தின் மாண்பு. நல்லவர்கள், வல்லவர்கள். தொல்லை, துயர், இடர் சிரமம் வந்தால் வந்து உதவிடும் கரங்கள்.”

இவ்விதம் இலண்டன் சிவன்கோயில் “சித்தா தம்பதிகள் மனிதருள் ஒப்பற்ற மாணிக்கமாக எமது சமுதாயம் எடுத்துக்காட்டுகிறது.”

வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயம், புகழ் மாலை செலுத்தியுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், “அன்பும், அடக்கமும் ஆனந்தமான வாழ்வும் கொண்டவர்கள் ஸ்ரீமான் சிதம்பரப்பிள்ளை மகேஸ்வரி தம்பதிகள்”.

கற்பக விருட்சமாக கல்விக்கடலாக விளங்கிய கந்தமுருகேசனார் பிறந்த புலோலி பெரும் பதியில் பிறந்து கல்வியால் கருணை உள்ளத்தால் இன்று பெருமையோடு இலண்டனில் வாழ்கின்றார். வைத்திய கலாநிதி மகேஸ்வரி அம்மாவும் வக்கீல் சிதம்பரப் பிள்ளை ஐயாவும் ஆற்றிவரும் சமூகப் பணிகளை வாழ்த்தாத நெஞ்சில்லை.

பல சமூகத்தினரை உறுப்பினராகக் கொண்ட உலக சமாதான மன்றத்தை திறம்பட நடத்தி ஏனைய சமூகத்தினரின் பாராட்டைப் பெற்றவர். மன்றத்தின் தலைவராகவும், துணைத் தலைவராகவும் பணியாற்றியவர். ஆண்டுதோறும் டிசம்பர் 10-ஆம் திகதி நடைபெறும் சர்வதேச மனித உரிமைத் தின மாநாட்டை பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு இழைக்கும் மனித உரிமை மீறல்களை சர்வதேச மயப்படுத்தியவர். அமைப்புகளுக்கு ஊடாக தமிழர் பிரச்சனையை முன்னெடுப்பதில் ஆர்வமாகச் செயற்பட்டவர். தமிழர் பிரச்சனையை ஏனைய சமூகங்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு சித்தா அவர்களின் ஆங்கில அறிவு பயனுள்ளதாகவிருந்தது.

சித்தா அவர்கள் பல சமய, சமூக, அரசியல், கலாச்சார சங்கங்கள் நிறுவனங்களில் பல வருடங்களாகப் பணியாற்றி வருகின்றார். சைவத் திருக்கோயில்கள் உட்பட பல அமைப்புகளுடன் இலவச சட்ட ஆலோசகராகவும் இவ் அமைப்புக்களில் முக்கிய பதவிகள் மூலம் சேவையாற்றி உள்ளார். தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு மிக முக்கியமான அமைப்பு. நீண்டகாலமாகத் தலைவராகவும் பணியாற்றி இலங்கைத் தமிழர்களின் மனித உரிமை மீறலுக்காக சர்வதேச ரீதியாக குரல் எழுப்பிய பெருமைக்குரியவர்.

சைவ முன்னேற்றச் சங்கத்தில் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் தலைவராகவும் சட்ட ஆலோசகராகவும் மற்றும் துறைகளில் உழைத்து சங்கத்தை வளர்த்து வந்தவர்களில் முக்கியமானவர்.

சித்தாவின் தொண்டுகள் மேலும் தொடரவும், உயர்ந்த அவர்தம் வாழ்வும், பணிவான பணியும் சிறக்கவும் அவரும் அவர் துணைவியாரும் நீடூழி வாழ்க! ●

# வல்வெட்டித்துறை மண்ணில் ஆழிக்குமரனுக்கு நீச்சல் தடாகம்!

வரலாற்றுப் புகழ்பெற்ற ஈழத்துச் சாதனை வீரனான ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவாக, அவர் பிறந்த வல்வெட்டித்துறை மண்ணில், அமைக்கப்பட்ட ஆழிக்குமரன் ஆனந்தன் நீச்சல் தடாகத் திறப்பு விழா கோலாகலமாக 9.8.2019 அன்று நடந்துள்ளது. வல்வெட்டித்துறை ரேவதி கடற்கரையில் சுங்க இலாகா ஒரு காலத்தில் இயங்கிய இடத்தில் 10 கோடி ரூபாய் செலவில் மாவீரன் ஆனந்தன் பெருமைக்குச் சான்று சொல்லும் வகையில், நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் மங்கள சமரவீரா திறந்து வைத்த இவ்வைபவத்தில் எம்.பி.க்கள் மாவை சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன் உட்பட பல அரசியல் பிரமுகர்கள் பங்குகொண்டு உரையாற்றினர். மறைந்த நீச்சல் வீரர் ஆனந்தனின் காதல் துணைவியார் திருமதி. மானில் ஆனந்தன், அவரது மகன் ரஜன் ஆகியோரும் இந்த விழாவில் கலந்துகொண்டனர். ஆனந்தனின் மனைவி மானிலுக்கு அமைச்சர் சமரவீரா சொந்த மாமியாவார்.

வல்வெட்டித்துறை வீரத்தின் விளைநிலம். அந்த மண்ணில் தோன்றிய ஈழத்தின் மாவீரன், விடுதலைப்புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவரைப் போன்றே மறக்க முடியாத மாவீரன்தான் ஆழிக்குமரன்.





















# ஈரோடு புத்தகத் திருவிழாவில்

## வவுனியூர் இரா.உதயணனுக்கு கௌரவம்

மக்கள் சிந்தனைப் பேரவை வருடாவருடம் நடாத்தி வரும் ஈரோடு புத்தகத் திருவிழாவின் 15-ஆம் ஆண்டு நிகழ்வுகள் ஆகஸ்ட் 02 முதல் 13 வரை நடைபெற்றது.

ஆகஸ்ட் 11-ஆம் திகதி, நடைபெற்ற “உலகத் தமிழர் படைப்பரங்கத்தின்” கோவையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் சு. துரை, வவுனியூர் இரா. உதயணன் அவர்களால் இதுவரை எழுதப்பட்ட சிறுகதைத் தொகுப்புக்கள், புதினங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து “ஈழத்து இலக்கிய ஆளுமை : வவுனியூர் இரா. உதயணன்” என்ற நூல் ஒன்றை எழுதியிருந்தார். இந்நூலின் வெளியீட்டு விழா த. ஸ்டாலின் குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. முனைவர் சு. சதாசிவம் (தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், சென்னை கிறித்தவக் கல்லூரி) அவர்கள் வெளியிட்டு வைக்க, திரு. ஓடை. பொ. துரையரசன் (தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற ஈரோடு மாவட்டச் செயலாளர்) முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

நூலாசிரியர் உரையினை பேராசிரியர் முனைவர் சு. துரை அவர்களும், சிறப்புரையை எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணனும் நிகழ்த்தினர்.

மாலை நேர நிகழ்வு, மாலை ஆறு மணிக்கு ஆரம்பமாகியது. இந்த நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த, இந்தியாவுக்கு விண்வெளி ஆராய்ச்சி மூலம் பெருமை சேர்த்த மயில்சாமி அண்ணாதுரை, ஐந்து முனைவர் பட்டங்களைப் பெற்றதுடன், இந்திய ஆய்வு மையத்தின் 2015-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை பணியாற்றிய இவரே முதன்முதலில் இந்தியா நிலாவுக்கு ஆய்வுக்கலம் அனுப்பிய சந்திராயன்-1 திட்டத்தின் திட்ட இயக்குனர். இவர் கிட்டத்தட்ட 3000 இந்திய மற்றும் சர்வதேச அறிவியலாளர்களைத் தலைமை தாங்கி நிலவில் நீர் கண்டுபிடித்து, இந்தியாவிற்குப் பொருமை சேர்த்தது ஒரு வரலாற்று நிகழ்வு.

வ.உ.சி. பூங்கா மைதானத்தில் நடைபெற்ற மாலை நிகழ்வில் பத்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்த நிகழ்வில் எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணன், மயில்சாமி அண்ணாதுரை அவர்களால் நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து, “அறிவியலும் மானுடமும் - நேற்று, இன்று, நாளை” என்ற தலைப்பில் மயில்சாமி அண்ணாதுரை பேசிய போது, அந்த மைதானத்தில் குழுமியிருந்த அத்தனை மக்களும் அவர் உரையை செவிமடுத்துக் கேட்டுக் கொண்டிருக்க, முழு அமைதி நிலையிலிருந்தது. ●

**- மதுரையிலிருந்து சோழ நாகராஜன்**





# 1008-வது முறையாக...

## அரசியலுக்கு வருகிறார் ரஜினி!

அரசியலுக்கு வருவதுகுறித்து பல ஆண்டுகளாகப் பூடகமாகப் பேசிக்கொண்டிருந்த நிலையில், 2017-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி சென்னை ராகவேந்திரா திருமண மண்டபத்தில், “நான் அரசியலுக்கு வருவது உறுதி. காலத்தின் கட்டாணம் இது” என்று முழங்கினார் ரஜினிகாந்த்.

‘ரஜினி அரசியலுக்கு வருகிறார்’ - இப்படி ஆயிரத்துக்கும் அதிகமான முறைகூட எழுதியிருக்கலாம். ஆனால், அவர் அரசியலுக்கு வருவது இன்னும் ‘புலி வருது’ கதையாகவேத்தான் இருக்கிறது.

என்றைக்காவது அவர் அரசியலுக்கு வருவார் என்ற நம்பிக்கையில் வீதி வீதியாய் போஸ்டர் ஒட்டியவர்களும், உயிரை பணயம் வைத்து உயரே நின்று அவரின் கட்-அவுட்டுக்குப் பாலாபிஷேகம் செய்த ரசிகர்களும், தொண்டராகும முன்னே ஓய்வு வயதைத் தாண்டிவிட்டார்கள். ஆனாலும், அசராமல் அவ்வப்போது அரசியல் பேசிக்கொண்டேதான் இருக்கிறார் ரஜினி.

அரசியலுக்கு வருவது குறித்து பல ஆண்டுகளாகப் பூடகமாகப் பேசிக்கொண்டிருந்த நிலையில், 2017-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி சென்னை ராகவேந்திரா திருமண மண்டபத்தில், “நான் அரசியலுக்கு வருவது உறுதி. காலத்தின் கட்டாயம் இது” என்று முழங்கினார் ரஜினிகாந்த். அரசியல் நுழைவு குறித்த அறிவிப்பு வெளியாகி இரண்டு ஆண்டுகள் முடியப் போகின்றன. இந்த இரண்டு ஆண்டுகளில் இரண்டு படங்களை முடித்துவிட்டார் ரஜினி. இப்போது ‘தர்பார்’ படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வெளிமாநிலங்களில் நடந்த ‘தர்பார்’ படப்பிடிப்பை முடித்துவிட்டு சென்னை திரும்பிய ரஜினி, தனக்கு வேண்டிய சில நண்பர்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார். அப்போது, “நான் சொன்னது போல வரும் சட்டமன்றத் தேர்தலில் களமிறங்கப் போவது உறுதி. அனைத்து மாவட்டங்களிலும் கட்டமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன. தை மாதம் பிறக்கட்டும்” என்று சொல்லி சஸ்பென்ஸ் வைத்தாராம்.



இதுபற்றி பேசிய ரஜினிக்கு நெருக்கமான சிலர், “பொங்கலுக்குத் தர்பார்” வெளியாகிறது. ரஜினி நடிக்கும் மற்றொரு படத்தின் படப்பிடிப்பு, வரும் நவம்பர் தொடங்கி அடுத்த மூன்று மாதங்களில் முடிக்கப்படவுள்ளது. அதற்கு முன்பே தை மாதத்தில் கட்சிப் பெயரை அறிவிக்கலாம் என்று ரஜினி ஆலோசித்து வருகிறார். இதற்குப் பின்னால் மற்றொரு காரணமும் இருக்கிறது. பி.ஜே.பி.-யின் தமிழகத் தலைவர் பதவிக்கு ரஜினியின் பெயரைக் கசியவிட்டதே டெல்லி பி.ஜே.பி. மேலிடம்தான் என்று ரஜினி நினைக்கிறார். ஏற்கெனவே அவர்மீது ‘பி.ஜே.பி. ஆதரவாளர்’ என்ற முத்திரை அழுத்தமாக விழுந்துள்ளது. இந்நிலையில், ‘இதுபோன்ற உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கசியவிட்டு, தமிழக அரசியல் களத்தில் என்னைப் பதம் பார்க்கிறார்களா!’ என்றும் நண்பர்களிடம் அவர் வருத்தப்பட்டுள்ளார். எனவேதான், தனிக்கட்சி என்கிற தனது நிலைப்பாட்டை உறுதியாக மீண்டும் அறிவித்துவிட்டு, அடுத்தகட்டப் பணிகளை அதற்குப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிறார் என்றனர்.

பி.ஜே.பி. தரப்பிலும் இதுபற்றிப் பேசினோம். தமிழகத்தைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் ஒருவர், அமித்ஷாவை சமீபத்தில் சந்தித்துப் பேசியிருக்கிறார். அப்போது ரஜினியின் அரசியல் நகர்வுகள் குறித்து பேச்சு கிளம்பியதும், ‘அவருக்கு அரசியல் கட்சி ஆரம்பிக்க விருப்பமில்லையோ?’ என்று அமித்ஷா கேட்டாராம். இந்தத் தகவல், ரஜினியின் காதுகளை எட்டியிருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த பி.ஜே.பி. பெண் பிரமுகர் ஒருவர், ரஜினிக்கு அரசியல் ஆலோசனை வழங்கும் ஒருவரிடம் ‘ரஜினி, கட்சி அமைக்கும் ஐடியாவில் இல்லையா என்று மேலிடத்தில் கேட்கிறார்கள்’ என்று சொல்லியிருக்கிறார். பி.ஜே.பி. மேலிடம் தன் விஷயத்தில் குழப்பமான நிலைப்பாட்டில் இருப்பதும் ரஜினிக்குத் தெரிய வந்திருக்கிறது.

இதற்கிடையில், தமிழக அரசியல் நகர்வுகள் குறித்து தனது அரசியல் ஆலோசகரிடம் ரஜினி கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறார். அப்போது ‘சட்டமன்றத் தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு, நாம் முழுமையான அரசியல் கட்சியாகச் செயல்படுவோம். அது உறுதி’ என்று சொல்லியிருக்கிறார். அதனால், தை மாதத்தில் கட்சிப் பெயரின் அறிவிப்பு வருவதற்கு வாய்ப்புண்டு என்றனர்.

‘தர்பார்’ படப்பிடிப்பு முடிந்த கையோடு, மன்ற நிர்வாகிகள் சிலரையும் ரஜினி சந்தித்து, “எந்தக் குழப்பமும் வேண்டாம், கட்சி ஆரம்பிப்பது உறுதி. பி.ஜே.பி. தரப்புடன் நாம் கூட்டணி வைப்பதா, வேண்டாமா என்பதை பிறகு முடிவு செய்து கொள்ளலாம். அ.தி.மு.க. ‘வீக்’காக இருக்கிறது. இதுதான் சரியான நேரம்” என்று உற்சாகமாகப் பேசியிருக்கிறார்.

ரஜினியின் கணக்கே, அ.தி.மு.க.வுக்கு மாற்றாக தேர்தல் களத்தில் நின்று தி.மு.க.வை எதிர்க்க வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது. இதன் காரணமாகவே தன்மீது ‘பி.ஜே.பி. ஆதரவாளர்’ என்கிற முத்திரையை முதலில் அகற்ற முடியுமா என்று பார்க்கிறார். ஆனால் பி.ஜே.பி. தரப்பிலோ, அரசியல் கட்சி அறிவிப்பை ரஜினி வெளியிட்டதுமே அவரை தங்கள் வலைக்குள் கொண்டுவந்து அவர் தலைமையில் ஓர் அணியை தமிழகத் தேர்தல் களத்தில் உருவாக்க வேண்டும் எனத் திட்டமிடுகிறது.

இவர்கள் இப்படிச் சொன்னாலும் ரஜினியின் அரசியல் குறித்து பேசுவதே இப்போது கேலியும் கிண்டலுமாகப் பார்க்கப்படுகிறது. இருபது ஆண்டுகளாக ரஜினியின் அரசியல் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவரின் ரசிகர்கள், அடுத்த ஆண்டும் காத்திருக்க வேண்டிய நிலை இல்லாமல் இருந்தால் சரி! ●

**- அ. சையது அபுதாஹீர்**

ந. பொன்குமரகுருபரன்



# எங்கே நித்தி?

“மாடுகளை, தமிழிலும் சமஸ்கிருதத்திலும் என்னால் பேச வைக்க முடியும்” என்று சவால்விட்டவர், இப்போது எங்கே இருந்து கொண்டு யூ டியூபில் பேசுகிறார் என்பதுதான் நித்தி மர்மத் தொடரின் புதிய அத்தியாயம். ‘நித்தியானந்தா, பிடதி ஆசிரமத்தில் பல மாதங்களாக இல்லை’ என்ற தகவல், சில மாதங்களுக்கு முன்பே கசிந்தது. இப்போது அவர் வெளிநாட்டில் பதுங்கியுள்ளதாகத் தகவல் பரவி வருகிறது. நித்தி எங்கே இருக்கிறார் என்ற கேள்விக்கு விடை தேடும் முன், அவரைப் பற்றி ஒரு சின்ன ஃப்ளாஷ்பேக்.

நித்தியானந்தாவின் இயற்பெயர் ராஜசேகரன். திருவண்ணாமலையில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். தன் பன்னிரெண்டாம் வயதில், ‘உடல் தாண்டிய அனுபவம்’ என்கிற பேரானந்தத்தை அடைந்ததாகக் கூறி, தன்னை ஆன்மிக வாதியாக அடையாளப்படுத்திக் கொண்டவர். அரசுப் பள்ளியில் பயின்று, பிறகு மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் படித்த ராஜசேகரனை, ஆன்மிகத் தேடல் உந்தித்தள்ளியது. ராமகிருஷ்ண பரமஹம்சரையும், விவேகானந்தரையும் மானசீகக் குருக்களாக ஏற்றுக்கொண்டு, மயிலாப்பூரில் உள்ள ராமகிருஷ்ண மடத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். மடத்தில் சேர்ந்தசில நாள்களிலேயே ‘ப்ரீமியம் தட்கல்’ முறையில் தனக்கு உடனே ‘தீட்சை’ வழங்குமாறு ராஜசேகரன் கோரிக்கை வைக்க, மடம் மறுத்துவிட்டது. அங்கேயிருந்து வெளியேறி நாடு முழுவதும் உள்ள இந்து ஆலயங்கள், மடங்களைச் சுற்றிப்பார்த்தவர், இறுதியாகச் சென்றடைந்த இடம், இமயமலை.

திடீரென 2000, ஜனவரி 1 அன்று, ‘ஞான அனுபூதி முக்தி’ என்னும் ஞானநிலையை அடைந்ததாகக் கூறிய ராஜசேகரன், தன் பெயரில் தியான பீடம் ஒன்றையும் தொடங்கி சுவாமி பரமஹம்ச நித்தியானந்தாவாக மாறினார். அப்போது அவருக்கு வயது வெறும் 22 தான். இன்று 41 வயதாகும் நித்தியானந்தா, 21 நாடுகளில் 800 கிளைகளுக்கும்மேல் தன் ஆசிரமங்களை நிறுவியுள்ளார். பெங்களூருக்கு அருகே உள்ள பிடதியில் 23 ஏக்கரில் அவரது ஆசிரமம் விரிந்து பரந்திருக்கிறது.

தொடக்கத்திலிருந்தே நித்தியானந்தாவின் கருத்துகளும் செயல்பாடுகளும் அதிரடியாகத்தான் இருக்கும். திடீரென ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் சார்புக் கோட்பாடே தவறு என்பார். ‘சூரியன் உதிப்பதை, 40 நிமிடங்கள் நிறுத்தினேன்’ என்பார். ‘அடுத்த 200 வருடங்களுக்கு நான் வாழ்வேன். 201-வது வருடத்தில் முக்திக்காக யார் வந்து நின்றாலும் என்னால் அளிக்க முடியாது. இபோதே வந்துவிடுங்கள்’ என ஆசிரமத்துக்கு ஆள் சேர்ப்பார். இப்போது, உலகத்திலேயே தன்னால் மட்டும்தான் சாகா வரம் அளிக்க முடியும். தன்னை சரணாகதி அடைவதைத் தவிர, மனிதகுலத்துக்கு வேறு வழியே இல்லை என்கிறார்.

அவருடைய பரவசப் பேச்சில் மயங்கும் பக்தர் கூட்டம் ஊருக்கு ஊர் இருக்கிறது. ஆனால், அவர் உலகப் புகழ் பெற்றது ஒரேயொரு வீடியோவில்தான். நடிகை ரஞ்சிதாவோடு அவர் நெருக்கமாக இருக்கும் வீடியோ, மீடியாவில் ‘லீக்’ ஆகி, பரபரப்பைப் பற்ற வைத்தது. நித்தியானந்தாவோடு பல வருடங்கள் ஒன்றாகப் பயணித்த லெனின் கருப்பன் என்பவர், நித்தி மீதே சென்னை காவல்துறையில் மோசடிப் புகார் அளித்தார். தன்னை பல வருடங்கள் பலவந்தப்படுத்தி, நித்தியானந்தா பாலியல் பலாத்காரம் செய்ததாக, அவரின் சிஷ்யை ஒருவரும் புகார் அளிக்க, இரண்டு முறை கைதுசெய்யப்பட்டு சிறைக்கும் அனுப்பப்பட்டார் நித்தி. இந்த வழக்குகள் இப்போதும் கர்நாடகாவின் ராம்நகர் நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

பேட்டி, பிரசங்கம், பெருநகரங்களில் பக்தர்களுக்குத் தரிசனம் என ஏதாவது ஒரு வகையில் ‘லைம்லைட்’டில் இருந்து கொண்டிருந்த நித்தியானந்தாவை, கடந்த ஓராண்டாக பக்தர்கள் எங்கேயுமே பார்க்க முடியவில்லை. பிடதியில் உள்ள தனது ஆசிரமத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்து வந்த நித்தியானந்தா, கடந்த பல மாதங்களாக யூ ட்யூப், ஃபேஸ்புக் மூலமாக மட்டுமே பக்தர்களைச் சந்திக்கிறார். நேரில் சந்திப்பதேயில்லை.

நித்தியானந்தா வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக சில மாதங்களுக்கு முன்பே தகவல் பரவியது. ஆனால், எதையும் உறுதி செய்ய முடியவில்லை. இதுதொடர்பாக, ஜூனியர் விகடன் இதழில் கழுகார் பகுதியில் சில மாதங்களுக்கு முன்பே எழுதியிருந்தோம். இப்போது வரும் தகவல்கள், அதை உறுதிப்படுத்துவதைப்போல் இருப்பதோடு, மேலும் பல அதிர்ச்சிகரமான தகவல்களும் பகிரப்படுகின்றன.

ஆசிரம உள்விவகாரங்களை அறிந்த சிலரிடம் பேசினோம்...

“நித்தியானந்தாவின் பாஸ்போர்ட் 2018, அக்டோபர் 31-ம் தேதியே காலாவதியாகிவிட்டது. பாஸ்போர்ட்டைப் புதுப்பிக்க நித்தியானந்தா விண்ணப்பித்த போது, அவர்மீது கிரிமினல் வழக்கு நிலுவையில் இருப்பதால், போலீஸார் தடையில்லாச் சான்று அளிக்கவில்லை. அதுவரையில், கம்போடியா, திபெத் என புனித யாத்திரை மேற்கொண்டிருந்தவர், பாஸ்போர்ட் காலாவதியானதால் வெளிநாடு செல்ல முடியாமல் இருந்தார். அந்தச் சூழலில்தான் அவர்மீதான பாலியல் புகார், மோசடி வழக்குகள் இறுகத் தொடங்கின. அவர் கைது செய்யப்படும் அபாயமும் நெருங்கியது.

2018-ஆம் ஆண்டு இறுதியில் வடமாநிலங்களுக்குப் புனித யாத்திரை மேற்கொண்டிருந்தவர், சில ஏஜெண்டுகள் மூலம் வெனிசுலா நாட்டுப் போலி பாஸ்போர்ட்டைப் பெற்றார். இதற்குக் கோடிக்கணக்கான ரூபாய், ஹவாலா முறையில் அளிக்கப்பட்டது. தரைவழி மார்க்கமாக நேபாளம் சென்ற நித்தியானந்தா வெனிசுலா பாஸ்போர்ட் மூலம் கரீபியத் தீவுகளுள் ஒன்றான ‘டொமினியன் குடியரசு’ நாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டார். தற்போது அங்கேயிருந்துதான், ‘கிரீன்டெக்’ என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நேரலையாகத் தன் பக்தர்களுக்குக் காட்சித் தருகிறார். வாரத்துக்கு ஒருமுறை காலையும் மாலையும் ஃபேஸ்புக்கில் நேரலையாக உரையாடுவதும் அங்கே உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இருந்துதான். கடந்த ஒரு வருடமாக அவர் இந்தியாவிலேயே இல்லை. இந்தத் தகவலை மிகவும் தாமதமாகத் தெரிந்துகொண்ட கர்நாடக போலீஸார், அவரை எப்படியாவது இந்தியாவுக்குக் கொண்டுவர சில மறைமுக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்” என்றனர்.

அதிர்ச்சிகரமான இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து நாம் கேள்வி எழுப்பியதும், முதலில் பரபரப்பான நித்தியானந்தாவின் ஆதரவாளர்கள், பிறகு சுதாரித்துக் கொண்டு, “அவர் சமீப காலமாக பிடதி ஆசிரமத்தில் பக்தர்களைச் சந்திக்காமல் இருப்பது உண்மைதான். வீடியோ கான்ஃபரன்ஸ் மூலமாகத்தான் சந்தித்து வருகிறார். இதற்காக, அவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டார் என்பதும், சட்டத்தின் முன் நின்ற அவர் அஞ்சுகிறார் என்பதும் சுத்தப்பொய்” என்றனர்.

பிடதி ஆசிரமத்தில் இப்போது பெரிய அளவில் பக்தர்கள் கூடுவதில்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இதனால் ஆசிரமத்தில் உள்ள பொருள்களைச் சிலர் அப்புறப்படுத்துவதாகவும் தெரிய வந்துள்ளது.



இதுகுறித்து விளக்கமறிய, நித்தியானந்தாவின் ஆசிரமத்தைத் தொடர்புகொண்டோம். தொலைப்பேசி எண்கள் பயன்பாட்டில் இல்லை என்ற அறிவிப்பே தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. அவரது அதிகாரப்பூர்வ முகநூல் பக்கத்துக்கும், அவருடைய இணைய பக்கத்தில் அளிக்கப்பட்டுள்ள *webmaster@nithyananda.org* இ-மெயில் முகவரிக்கும் தகவல் அனுப்பிவிட்டு, பதிலுக்காகக் காத்திருக்கிறோம். நித்தியின் தீவிர சிஷ்யைகளான மா நித்தியானந்த மாயி சாமி (நம்ம ரஞ்சிதாதாங்க), மா நித்தியானந்திதா, மா நித்ய ப்ரியமாயனந்தா ஆகியோருக்கும் தகவல் அனுப்பினோம். யாரிடமிருந்தும் பதில் இல்லை.

ரஞ்சிதாவின் தந்தை அசோக்குமாரிடம் பேசிய போது, “ரஞ்சிதா கடந்த மூன்று மாதங்களாக அமெரிக்காவில் இருக்கிறார்” என்று தகவல் கூறினார். ●

# வாசகர் கடிதம்




### தொடர்ந்து வெளிவரவேண்டும்!

'புதினம்' லண்டனில் வாழும் புலம் பெயர்ந்த மக்களின் ஒரே தமிழ்பத்திரிகை என்ற உணர்வுடன்தான் மாதம் தவறாமல் எடுத்துப்படிப்பேன். மாதம் இரு முறையாக வெளிவந்து இப்போது புதுப்பொலிவுடன் வண்ணத்தில், நீண்ட அனுபவமுள்ள ஒரு பத்திரிகையாளனால் நடாத்தப்படுகின்ற ஒரு இதழ் என்பது என்னைப் போன்றவர்களுக்குத் தெரியும் தாயகத்திலிருந்து 30 வருடங்களுக்கு முன்னர் இங்கு அகதியாக வந்து குடும்பத்துடன் தஞ்சம் அடைந்தவன். ஈழத்திலும், தலைநகரிலும் பத்திரிகையாவுனாக இருந்த ஒரு வரால் நடாத்தப்படுகிறது. இந்தப் பத்திரிகை எப்படித்தான் இவ்வளவு விஷயங்களையும் அடக்கி, இலவசமாக வெளியிடுகிறார் என்று வியந்திருக்கிறேன். இங்குள்ள பிரபலமான ஆங்கில நாளிதழ்களே தடுமாறி இலவசமாகவும், இணையத்தளங்களுக்கும் போகும்போது 'புதினம்' மட்டும் வெள்ளி விழாவை நோக்கி வெள்ளி நடைபோடுகின்றனது என்று நினைப்பேன். ஆனால் ஒருவரே தனிமனிதனாக இவற்றை எல்லாம் செய்து முடிக்கிறார் என்பதை அறியும்போது, சங்கடமாகத்தான் இருக்கிறது.

தாயகத்திலும், தமிழகத்திலும் தமிழ் இதழ்களை அச்சுப் பிரதியாக வெளியிடாமல் இப்போது இணையத்துக்கு மாறியிருக்கின்றன. இப்படி 'புதினம்' இதழ் மாறாமல், எங்களைப் போன்றவர்களே பெருமளவில் படிக்கிறார்கள் என்பதை கருத்தில் கொண்டு வெளியிடுவது நன்றிக்குரிய விஷயம் தொடர்ந்து 'புதினம்' வெளிவரவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

- சோ.முருகவேள்,
HARROW

### நன்றி

பிரித்தானியாவில் தமிழர்களால் நடாத்தப் படுகின்ற கலை இலக்கிய நிகழ்வுகளுக்கு உங்கள் பத்திரிகையில் ஆதரவு கொடுத்து, ஊக்கம் அளிப்பதற்கு மிக்க நன்றி.

கே. கருணாகரன், EASTHAM

### பாராட்டுகள்

எந்தத் தமிழ் பத்திரிகையிலும் இல்லாத ஒன்றைக் கவனித்தேன். இத்தனை வித்தியாசமான எழுத்தாளர்களை எப்படி எழுத வைக்கிறீர்களோ? டாக்டர் ஸ்ரீதரன், விமல் சொக்கநாதன், வவுனியூர் இரா.உதயணன், பனங்காட்டன், ப.வை. ஜெயபாலன் சிவ பரிமேலழகர் போன்ற இன்னும் சிலா..... சலிப்பின்றிப்படிக்கக் கூடிய விதத்தில் எழுதுவார்கள். ஒரு பொறுப்பான ஆசிரியருடைய வேலையே அதுதான். பாராட்டுக்கள்.


என்.உதயகுமார்.
HAYES

### சுவையான தகவல்கள்

'போகிற போக்கில்....' அருமையாக இருக்கின்றது. பலவற்றைச் சுவைப்பட எழுதுவதில் ஏ.ஜே. ஞானேந்திரன் கை தேர்ந்தவராக இருக்கிறார்.

கு.ராம்
ILFORD

# பாட்டு ஒரு பாட்டு!



கவிஞர் சிவசிவா அழகன்ராஜ்



பாட்டு ஒரு பாட்டு
இதுவரை யார் வாயிலும்
பாடாத ஒரு பாட்டு!

பாட்டு ஒரு பாட்டு
இதுவரை ஓர் ஏடிலும்
எழுதாத ஒரு பாட்டு!

உன்னையே மெட்டாக்கி
நான் பாடிய ஒரு பாட்டு
உன்னையே பாட்டாக்கி
நான் ரசித்த ஒரு பாட்டு!

மெட்டுக் காட்டாத
ஒரு பாட்டு
இசை போடாத
ஒரு பாட்டு!

எட்டுத் திசையிலும்
படிக்காத ஒரு பாட்டு
பலமுறை படித்தாலும்
அலுக்காத ஒரு பாட்டு!

பாட்டில் பல்லவியில்
முதலின்பம்
அது எம் உச்சந்தலையில்
தொடங்கிய பாட்டு!

பாட்டில் அனுபல்லவியில்
இடையின்பம்
அது எம் உயிர்வரையில்
தொடர்ந்த பாட்டு!

பாட்டில் சரணத்தில்
கடையின்பம்
அது எம் முழுமையைநாம்
அனுபவித்த பாட்டு!

குடியென்ன
கூத்தென்ன
மங்கையென்ன
மஞ்சமென்ன!

சுகமென்ன
சொத்தென்ன
பதவியென்ன
பலதுமென்ன!

இதுவரையில்
இயம்பாத---
இனிமையென்ன
இன்பமென்ன---!

இவ் வின்பம்
எவ் வகையிலாயினும்
சிற்றின்பம் சிற்றின்பமே!

எவ் வின்பம்
எது வரையிலாயினும்
பேரின்பம் பேரின்பமே!

அங்கிருந்தே
தொடங்குகிறோம்
இங்குவந்தே
தொடருகிறோம்!

இடையில் தங்கிச்
செல்லவே---
வந்திருக்கிறோம்!

இறுதியில் தூங்கிச்
சென்றே---
சேர்ந்துவிடுகிறோம்!

மனித வாழ்க்கை எம்
பயணம் முடிவிலே---
அங்கேயே சென்றும்
சேர்ந்தும் விடுகிறோம்!

# வாழும் வரை வாழ்க்கை வாழ்ந்து காட்டுவோம்!



நாத்திகம் பேசிய M.R ராதா இறக்கும் முன் காஞ்சி சங்கராச்சாரியாரை பார்த்து தஞ்சம் அடைந்தார்.

நாத்திகம் பேசிய கண்ணதாசன் இறக்கும் முன் அர்த்தமுள்ள இந்துமதம் எழுதி விட்டு உயிரை விட்டார்.

நாத்திகம் பேசிய கருணாநிதி இராமானுஜர் காவியத்தை எழுதி, தன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்தார்

எவ்வளவு தூற்றினாலும் போற்றினாலும் கடைசியில் வர வேண்டிய இடம் இறைவனிடமே....

சலங்கையின் விலை ஆயிரக்கணக்கில்,

அதை காலில் தான் அணிய முடியும்.

குங்குமத்தின் விலை மிகக்குறைவு.

அதை நெற்றியில் அலங்கரித்து கொள்வார்கள்.

இங்கு விலை முக்கியமில்லை,

அதன் பெருமை தான் முக்கியம்.

உப்பு போன்ற கடினமான வார்த்தைகளால் நம்மை திருத்துபவன் உண்மையான நண்பன்....

சர்க்கரை போன்ற இனிப்பான வார்த்தைகளால் நம்மை புகழ்பவன் நயவஞ்சகன்.

புழுவுற்ற உப்பும் புழுவுறாத இனிப்பும் இவ்வுலகில் உள்ளதாக இதுவரை வரலாறு இல்லை.

இங்கு
கோயில்கள்,
மசூதிகள்,
திருத்தலங்கள் வேடிக்கையானவை..

பணக்காரன் உள்ளே சென்று பிச்சை எடுக்கிறான்,

ஏழை வெளியில் நின்று பிச்சை எடுக்கிறான்....

ஆக ஏதோ ஒரு வகையில் அனைவரும் பிச்சை எடுப்பவர்களே.

காணாத கடவுளுக்கு பஞ்சாமிர்தம் படைப்பார்கள்,

கண்கண்ட கடவுளுக்கு (தாய்தந்தை) பழைய சோறும், கிழிந்த துணியும் கொடுப்பார்கள்.

மனிதப் பிறவி சிறப்பானதாகத் தெரியவில்லை,

ஏனெனில் பிறக்கும்போதும் அழுகை,

சாகும்போதும் அழுகை,

இடையில் எல்லாம் நாடகம்.....

தீங்கு விளைவிக்கும் மது விற்கும் இடத்திற்கு ஓடோடி போவான்,

அமுதமாம் பால் விற்பவர் வீடு வீடாக தெருத் தெருவாக வெயிலில் சுற்றுகிறார்.

பால்காரரைப் பார்த்தால் பாலில் தண்ணீர் ஊற்றுகிறார் என்று சண்டையிடுவார்கள்,....

தண்ணீரில் நஞ்சுகளை கலந்து விற்கும் பானங்களை தலைமீது வைத்து கொண்டாடுகிறார்கள்.

மனிதனின் பிணத்தை தொட்டால் அல்லது பார்த்தாலே தீட்டு எனக் குளிக்கும் மனிதன், வாயில்லா ஜீவன்களை பிணமாக்கி வகைவகையாச் சமைத்து விழா எடுப்பார்கள்.

இவ்வளவு தான் மனிதனின் வாழ்க்கை.

இதற்குள் எதற்கு உறவுகளுக்குள்

கோபம்,

விரோதம்,

வீண்பழி,

கௌரவம்,

அஹங்காரம்,

அதிகாரம்,

ஆணவம்,

கொலை,

கொள்ளை,

காழ்ப்புணர்ச்சி?

எது நமதோ அது வந்தே தீரும்.

யாராலும் தடுக்கமுடியாது.

நமதில்லாதது...

நமக்கில்லாதது...

எது செய்தாலும் வராது. யாராலும் தரவும் முடியாது.

வாழும் வரை வாழ்க்கை...

வாழ்ந்து காட்டுவோம்..

**பழக்கத்திற்கு இனியவராக,**
**மற்றவர்களின் இதயத்தில்....**
**சிந்திப்போம்... வாழ்க வளமுடன்...**

*– தமிழன்*

# ஊடகத்திரு

‘எஸ்தி 50+’

## நூல் வெளியீட்டு விழா

வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கையின் அதிமூத்த ஊடகவியலாளர்களுள் ஒருவரும், பத்திரிகை - வானொலி - தொலைக்காட்சி - சஞ்சிகை என்னும் சகல ஊடகப்பரப்புகளிலும் ஐம்பது ஆண்டுகளைத் தாண்டியும் தொடர்ந்து பணியாற்றி வருபவரும் கனடாவிலிருந்து கடந்த 29 ஆண்டுகளாக மாதம் தவறாது வெளிவந்து கொண்டிருக்கும் 'தமிழர் தகவல்' இதழின் முதன்மை ஆசிரியருமான

திரு எஸ். திருச்செல்வம் (எஸ்தி) அவர்களின்

ஊடக ஆளுமைகளை எடுத்தியம்பும் ஐம்பது துறைசார் பிரமுகர்களின் கட்டுரைகளைத் தாங்கிய

ஊடகத்திரு - ‘எஸ்தி 50+’

நூலின் வெளியீட்டு விழாவுக்கு வருகை தருமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

நிகழிடம்: Harrow Civic Centre (Council Chamber)
நிகழ்காலம்: 2019 அக்டோபர் 13, ஞாயிற்றுக்கிழமை
நிகழ்பொழுது: பிற்பகல் 6:00 மணிமுதல் 9:00 மணிவரை

விழா ஏற்பாட்டாளர்கள்

ஈ.கே. ராஜகோபால்
077 353 46890
020 8767 8004
editor@londonputhinam.co.uk

பிறேம் சிவகுரு
077 7931 691755
mediaman2004@gmail.com

- விழா குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பமாகி நிறைவுறும்.
- நூல் வழங்கல் மூலம் கிடைக்கப்பெறும் நிதி சில பொதுப்பணிகளுக்கு வழங்கப்படும். (நூல் விற்பனை செய்யப்படமாட்டாது)
- விழாவில் மாலைகள், பட்டாடைகள், சால்வைகள், வாழ்த்துப் பத்திரங்கள் வழங்கல் தவிர்ப்பைக் கடைப்பிடிக்கிறோம்.



# நாட்டியாலயா
# Natyalaya

**விஜயதசமி – 7.10.2019 திங்கட்கிழமை**

**Vijayathasami Dance Class and Blessings**

**38 MOFFAT ROAD, TOOTING BROADWAY
LONDON SW177EZ**

**மாலை 5 மணிமுதல் 9 மணிவரை**

எங்கள் நாட்டியாலயா நடனப் பாடசாலை மாணவர்கள் விஜயதசமி தினத்தை கொண்டாட உள்ளோம். மேற்குறிப்பிட்ட நேரத்தில், இந் நந்நாளில் பழைய மாணவர்கள் – புதிய மாணவர்கள் அனைவரும் குருவின் ஆசியைப் பெற்று நடன வகுப்புகளில் பங்கு பற்றிச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.



**Vijayathasami New Entrolment and Current Students are welcome to get from Guru.**

**07904069369, 02087678004
07904069370**

ராகினி ராஜகோபால் (அதிபர், நாட்டியாலயா)
ஷர்மினி கண்ணன்

# தமிழீழத் தேசிய மாவீரர் நாள்

நவம்பர் 27 2019

TAMIL EELAM NATIONAL HEROES DAY




**ExCeL LONDON**
1 Western Gateway, Royal Docks, London E16 1XL
(Nearest Stations: Custom House, Prince Regent)

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு – பிரித்தானியா
020 3371 9313 www.tccuk.org / www.tnrf.org.uk

Looking for an
# ACCOUNTANT ?

We are next to you!
We provide solutions for your Accountancy needs

உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months



P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER

183, Burnt Oak Broadway,
Edgware, Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)

www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com